
# வானவில்

**VAANAVIL**

இதழ் 169 | தை 2025

ISSUE 169 | January 2025


# மாற்றம் எங்கே?




“மாற்றம் ஒன்றே மாறாதது” என்பது உலகில் உள்ள அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒரு உண்மை.

ஆனால் இலங்கையில் இப்பொழுது ஆட்சியில் உள்ள ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்து எதிர்மாறானதாக இருக்கின்றது.

இந்த அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றது.

இந்த இரு தேர்தல்களும் நடைபெற்ற காலத்தில் தேசிய மக்கள் சக்தி செய்த பிரச்சாரங்களின் போது, தாம் ஆட்சிக்கு வந்தால் இலங்கையின் சமூக அமைப்பு முற்றுமுழுதாக மாற்றியமைக்கப்படும் (System Change) எனப் பிரச்சாரம் செய்திருந்தது. சமூக மாற்றம் என்பதன் பொருள், தற்போது நடைமுறையில் உள்ள சகல விடயங்களும் தலைகீழாக மாற்றப்படும் என்பதாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் சுமார் 75 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த இரண்டு முதலாளித்துவக் கட்சிகளும் பின்பற்றிய பிற்போக்கான அரசியல் – சமூக – பொருளாதாரக் கொள்கைகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்து, அதனால் 2022 இல் பதவியில் இருந்த அப்போதைய அரசை ‘அரகலய’ என்ற போராட்டத்தின் மூலம் அகற்றியிருந்த மக்கள், தேசிய மக்கள் சக்தியின் பேச்சை நம்பி அந்தக் கட்சிக்கு அபரிமிதமாக வாக்குகளை அள்ளிப்போட்டு அவர்களை வெற்றிபெற வைத்தனர்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்கள், அந்தக் கட்சி பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை தவறாது நிறைவேற்றுவார்கள் என்றே நம்பியிருந்தனர். ஆனால் அந்த ஆட்சி ஏற்பட்டு மூன்று மாதங்கள் ஆகியும் அவர்கள் சொன்ன மாற்றங்கள் எவையும் நடைமுறைக்கு வரவில்லை. மாறாக, ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்ற நிலையே தொடர்கின்றது.

உதாரணமாக:

தாம் ஆட்சிக்கு வந்தால் முன்னைய ரணில் விக்கிரமசிங்க அரசு நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்த இலங்கைக்குப் பாதகமான ஒப்பந்தத்தை நீக்குவோம் அல்லது மாற்றியமைப்போம் என்றார்கள். ஆனால் அவ்வாறு எதனையும் செய்யாமல், ரணில் விக்கிரமசிங்க நாணய நிதியத்துடன் செய்த அதே ஒப்பந்தத்தை அப்படியே தொடர்வதுடன், நாணய நிதியம் மக்களுக்கு விரோதமான முறையில் முன்வைத்த நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

முன்னைய ரணில் அரசு இந்தியாவுடன் ‘எட்கா’ (ETCA) என்ற இலங்கைக்கு பாதகமான உடன்படிக்கையில் கைச்சாத்திட சம்மதித்திருந்தது. அத்துடன் கொழும்பு துறைமுகத்தில் சில கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும், இலங்கையில் மின்சார உற்பத்திக்காக காற்றாலைகளை நிறுவவும், இந்தியாவின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கியிருந்தது. இந்த நடவடிக்கைகள் இலங்கையின் நலன்களுக்கு எதிரானவை எனக்கூறி தேசிய மக்கள் சக்தி அவற்றைக் கடுமையாக எதிர்த்திருந்தது.

ஆனால் இப்பொழுது தாம் ஆட்சிக்கு வந்ததும், அதானியின் திட்டங்களைத் தொடர்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதுடன், ‘எட்கா’ சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடர இணங்கியும் உள்ளது.

அது மாத்திரமின்றி, முன்னைய அரசாங்கங்களை விட இலங்கையின்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# மேலும் ஒரு போர் நிறுத்த நாடகம்

**இ**ஸ்ரேல் – காஸா (ஹமாஸ்) இடையே போர் நிறுத்த ஒப்பந்தமொன்று ஏற்பட்டுள்ளதாகவும், இந்த ஒப்பந்தம் 19.01.2025 இலிருந்து அமுலுக்கு வரும் என்ற அறிவிப்பு 14.01.2025 அன்று வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பு வெளியான பின்னரும், இஸ்ரேல் காஸா மீது வான்வழி தாக்குதலைத் தொடர்ந்து நடத்திய வண்ணமுள்ளது. இத்தாக்குதல்களில் மாத்திரம் இதுவரையில் 150 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போர் நிறுத்த அறிவிப்பின் மூலம் காஸாவில் கடந்த 15 மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருந்த இஸ்ரேலின் கொலை வெறித் தாக்குதல் தற்காலிமாக முடிவுக்கு வரலாம். அத்துடன் காஸா மக்களுக்கு நிவாரணங்கள் கிடைக்கலாம், காஸாவில் கைதிகளாக இருக்கும் இஸ்ரேலியர்கள் மற்றும் இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட கைதிகளில் (தற்போதைய காஸா ஆக்கிரமிப்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை இதில் உள்ளடக்கப்படவில்லை) ஒரு பகுதியினரும் விடுவிக்கப்படலாம். ஆனால் இஸ்ரேல் – பலஸ்தீனியர்களின் 75 ஆண்டு காலத்திற்கு மேலான பிணக்கானது முடிவுக்கு வந்துள்ளதாகக் கொள்ள முடியாது.

2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதியன்று, ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நிகழ்த்தி நூற்றுக்கணக்கானோரை கைப்பற்றி வைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல், காஸா மீது வான் மற்றும் தரைவழியான போரினைத் தொடுத்தது. இந்த போரில் – யுத்த நிறுத்த அறிவிப்பு பிரகடனப்படுத்தப்பட்ட போது – 46,700 இற்கு மேற்பட்ட காஸா குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவிக்கின்றது. ஆனால் புகழ்பெற்ற பிரித்தானிய மருத்துவ இதழான 'தி லான்செட்' (The Lancet), இதுவரையில் காஸாவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 64,260 ஆக இருக்கலாமெனக் கூறுகின்றது. இது காஸா சுகாதார அமைச்சகம் பதிவு செய்ததை விட 37 சதவீதம் அதிகமாகும்.

தற்போதைய போர் நிறுத்தம் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் 6 வார காலத்திற்குள் முதற்கட்ட போர் நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இக்காலகட்டத்தில் காஸவிற்குள் 600 லொறிகளில் உணவு, மருத்துவ பொருட்களை அனுமதித்தல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற வழிவகை செய்தல் ஆகியன இடம்பெறும். அத்துடன் ஹமாஸ் கைது செய்து வைத்துள்ள பெண்கள், குழந்தைகள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் உட்பட 33 இஸ்ரேலிய கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். இதற்குப் பதிலாக, ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க வேண்டும். இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளவர்களில் ஒக்ரோபர் 7 இற்குப் பிறகு இஸ்ரேலிய படைகளால் கைது செய்யப்பட்ட பலஸ்தீனர்களும் அடங்குவார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைதிகள் பரிமாற்றம் நிகழ்கையில், இஸ்ரேல் அதன் ஆக்கிரமிப்புப் படைகளை காஸாவின் மக்கள் குடியிருப்புகளிலிருந்து அகற்றி இஸ்ரேலுடனான காஸாவின் எல்லையிலிருந்து 700 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளுக்குள் வாபஸ் பெற வேண்டும்.

இந்த போர் நிறுத்த உடன்பாட்டின் இரண்டாவது, மூன்றாவது கட்டங்களின் விபரங்களை இருதரப்பினரும் கொள்கையளவில் ஒப்புக் கொண்டிப்பதாகத் தெரிய வருகின்றது. ஹமாஸ் கைவசமுள்ள முழுக்கைதிகளும் விடுவிக்கப்பட்டு, இஸ்ரேலியப் படைகள் முற்றுமுழுதாக காஸா நிலப்பரப்பிலிருந்து வெளியேறுதல் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தக் கட்டங்களில் நிகழவுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதற்கான பேச்சுவார்த்தைகள் போர் நிறுத்தத்தின் முதற்கட்டத்தில் (முதல் ஆறு வாரங்களில்) நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முதற்கட்டம் முடிந்தவுடன் இஸ்ரேல் மீண்டும் காஸா மீதான தாக்குதலை தொடராது என்பதற்கான எந்த உத்தரவாமும் இஸ்ரேலால் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

15 மாத கால இஸ்ரேல் – காஸா யுத்தத்தில் இருபகுதியினருமே தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும். ஹமாஸை அழித்து பணயக்கைதிகளை மீட்டு காஸைவைத் தனது முழுக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் என்ற இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு எண்ணம் நிறைவேறவில்லை. (எனினும் இந்த யுத்தத்தின் விளைவாக, அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சில முஸ்லீம் நாடுகளால் லெபனான் மற்றும் சிரியாவில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றங்களால் இஸ்ரேல் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பது என்பது உண்மைதான்) அதேநேரத்தில் 2023, ஒக்ரோபர் 7 இல் மிகப்பெரிய தாக்குலை நிகழ்த்தி, உலகளவில் கவனத்தை ஈர்த்து 1967 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட எல்லைக்கு இஸ்ரேலை நகர்த்தலாம் என்ற ஹமாஸின் எண்ணமும் நிறைவேறவில்லை.

பலஸ்தீனியர்களுக்கு எதிரான கொடூரம் யுத்தநிறுத்தங்களால் நிறுத்தப்பட போவதில்லை என்பதை வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் தெரியும். இந்த உத்தேச யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் நிரந்தரத் தீர்விற்கான எந்தவொரு வாசகமும் இல்லை. இது போலியானது, பல வழிகளில் சிதறிவிடும் அபாயத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. பலஸ்தீனியர்களை அவர்களின் நிலத்திலிருந்து அகற்றுவதென்ற இஸ்ரேலின் இலக்கு எப்போதும் போலவே மாறாமல் உள்ளது.

## *15வது ஆண்டில் வானவில்*

**இ**ந்த இதழில் 'வானவில்' தனது 15வது ஆண்டினைத் தொடுகின்றது. இது ஒரு பெரிய சாதனை என்பதை இதழியல் துறை சார்ந்த எவரும் ஏற்றுக் கொள்வார்கள். 'வானவில்' இதழை தொடர்ச்சியாகப் படித்து ஆதரவு தரும் வாசகர்கள் இல்லாமல் இந்தச் சாதனையை நிகழ்த்தியிருக்கவே முடியாது.

ஊரோடு ஒத்தோடும் வகையில் 'வானவில்' வெளியாகும் ஆக்கங்கள் இருப்பதில்லை என்பதால் நாங்கள் பலவித சவால்களை தொடர்ச்சியாகச் சந்தித்து வருகிறோம். எம்மைச் சுற்றியிருக்கும் பெரும்பான்மை மக்களுடைய எண்ணங்கள், மற்றும் சமூக ஊடகங்களிலும் வெகுஜன ஊடகங்களிலும் வெளியாகும் கருத்துக்களுக்கும் 'வானவில்' வெளியாகும் கருத்துகளுக்கும் இடையே எப்போதுமே முரண்பாடுகளைக் காணலாம். இந்த அடிப்படை முரண்பாடுகளை சரியாக உள்வாங்கிய தரப்பினரே 'வானவில்' இதழைத் தாங்கிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்வரும் காலங்களில் நாங்கள் முகங்கொடுக்கப் போகும் புதிய சவால்களுடன் இவர்கள் எம்முடன் பயணிப்பார்களென நாங்கள் முழுமையாக நம்புகின்றோம்.

எனவே, இத்தருணத்தில் 'வானவில்' இதழுக்கு தொடர்ச்சியாக ஆதரவும் ஊக்கமும் அளித்து வரும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

## *வாழ்த்துகள்!*

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் இனிய புதுவருட – தைப்பொங்கல் வாழ்த்துகள்.

**–'வானவில்' குழுமம்**


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# களியாட்டம் முடிந்து அரசாங்கம் தனது கோரப்பற்களை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது!




எமது புதிய அரசாங்கத்தின் மீது சிறிது அனுதாபம் ஏற்படுகின்றது. தொழிற்சங்க மற்றும் மாணவர் அமைப்புகளின் பின்பலத்துடன் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் அதிகாரத்துக்கு கொண்டு வரப்பட்டனர். மக்கள் அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கினர். இந்த எதிர்பார்ப்புகள் எப்படி நிறைவேற்றப்படும் என நாம் ஒருபோதும் கேட்காதது பெரும் சோகமாகும்.

அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற நேரத்தில் அவர் வழங்கிய கவர்ச்சிகரமான வாக்குறுதிகளில் ஒன்று, இலங்கையர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும், வேலை நிறுத்தங்களையும் இனிமேல் காணமாட்டார்கள் என்பதாகும். எங்களில் சிலருக்கு இத்தகைய போராட்டங்களை ஜே.வி.பியின் குண்டர்கள் முளையிலேயே கிள்ளியெறிந்த அந்த கெட்ட பழைய நாட்களை மனதில் வைத்துக் கொண்டுதான் இந்த நபர் இவ்வாறு கூறுகிறாரோ என்ற எண்ணம்தான் மனதில் உதித்தது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் அமைப்பிலிருந்து விலகி, சுதந்திர மாணவர் சங்கம் என்ற தனியானதொரு அமைப்பைத் தோற்றுவித்த அதன் தலைவர் தயா பத்திரான கொலை செய்யப்பட்ட சம்பவம் நினைவுக்கு வந்தது.

இன்றைய ஜே.வி.பி. சம்பளங்கள் அப்படியே இருக்க, விலைவாசி அதிகரித்துச் செல்வதற்கு எதிராக தொழிற்சங்க அமைப்புகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாதவாறு தடுத்து வைத்திருப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. அல்லது, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஈடு செய்வதற்கு அரசாங்கம் சம்பளத்தை அதிகரிக்க உள்ளதா?

ஆளும் வர்க்கத்தின் நடவடிக்கைகளால் ஏழை மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது அவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர் அமைப்புகள் உட்பட தொழிற்சங்கங்களை வீதியில் இறக்கிப் போராட்டங்கள் நடத்திய அன்றைய அதே ஜே.வி.பி. இல்லையா இது? ஜனாதிபதி மற்றும் பொது தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் ஒரு மாதம் இருவேளை உணவு உண்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் தேவையாக இருந்தது. இன்று பெரும்பாலான மக்கள் உண்ணும் நாட்டு அரிசியின் விலை கிலோ ஒன்று 230 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இலங்கையர்கள் தமது சமையலில் பொதுவாகப் பயன்படுத்தும் தேங்காயின் விலை 2024 ஓகஸ்டில் 120 ரூபாவாக இருந்தது. இப்பொழுது 200 ரூபாவைத் தாண்டியுள்ளது. இந்த விலை அதிகரிப்புகளால் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் பெரிதும் அவதிப்படுகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு பிரதான ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், தாங்கள் வீதிக்கு இறங்காமலே அரசாங்கம் ஆசிரியர்களின் சம்பளங்களில் மாற்றங்களைச் செய்யும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். ஆனால், துரதிஸ்ட்டவசமாக நேற்று அசாதாரண நிகழ்வொன்றை நாடு கண்டது. இசுறுபாயாவில் உள்ள கல்வியமைச்சு தலைமை அலுவலுகத்தின் முன்னால் 500 பேர் அளவு கொண்ட பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வீதியில் இறங்கிப் போராடினர்.

பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வீதியில் இறங்கிப் போராடியதும், போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததும் ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல. வேறு அரசியல் கட்சி ஏதாகினும் நாட்டை ஆட்சி செய்திருந்தால், ஜே.வி.பியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து இந்த உத்தியோகத்தர்களைத் தாமே வீதிக்கு இட்டுச் சென்று அவர்களது கோரிக்கையின் வெற்றிக்காகப் போராடியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பொறுப்பான இவர்களது அரசாங்க படைகள் கிளர்ச்சி செய்த தொழிலாளர்களுடன் மோதியிருக்கிறார்கள்.

இந்த மோதலின் முடிவில் பல தொழிலாளர்களும் பொலிசாரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். கிளர்ச்சி செய்த தொழிலாளர்களில் சிலர் விசாரணைக்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ‘என்ன நடக்கிறது சுற்றிவர? அசிங்கமான பழக்கவழக்கம் சுற்றிவர நடைபெறுகிறது’ என்பதை இறுதியில் அரசாங்கம் கண்டு பிடித்திருக்கிறது. நிலைமை மோசமானதால் இப்பொழுது தங்கள் கைகளைத் தாங்களே கடித்துக் கொள்கின்றனர்.

வடக்கில் ஜே.வி.பியும் தேசிய மக்கள் சக்தியும் இணைந்து பாரம்பரிய தமிழ் கட்சிகளை அப்புறப்படுத்தியதால் புதிய பிரச்சினையான சூழல் உருவெடுத்துள்ளது.

சாதாரணமாக ஜே.வி.பி. – தேசிய மக்கள் சக்தி கூட்டு மக்கள் மத்தியில் உறுதியாக வேர் விட்டுள்ளவையாகும். ஆனால் கவலைக்குரியதாக, தங்கள் மூக்கிற்கு கீழே நடைபெறும் மோசடிகளையே கோட்டை

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க…**

# புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டது எல்லா இலங்கையர்களுக்கும் விடுதலையைக் கொண்டு வந்துள்ளது! -முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

பின்வரும் அறிக்கையை இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி (Ali Sabry) விடுத்திருக்கிறார்:

அண்மையில் சில தனிநபர்கள் – குறிப்பாக இலங்கையின் கள நிலபரம் பற்றித் தெரியாத சில புலம்பெயர் நாட்டவர்கள் – புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பு என்று குறிப்பிட்டதற்காக என்னை விமர்சித்துள்ளனர். அவர்கள் இது ஒரு “சுதந்திரப் போராட்டம்” எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களது கூற்று உண்மையை மறுப்பது மட்டுமல்லாது, இலங்கையின் இருண்ட காலங்களில் அங்கு வாழ்ந்தவர்களின் நினைவுகளையும் மறுப்பதாக உள்ளது. எனவே, வலி மிகுந்த அந்த உண்மைகளை நினைவு கூர்வது அவசியமாகவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலைப் போராளிகள் அல்ல. அவர்களது அமைப்பு ஈவு இரக்கமற்ற ஒரு பயங்கரவாத அமைப்பு. அவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லீம் என்றில்லாது எல்லா சமூகங்களுக்கும் பாரிய அழிவுகளை ஏற்படுத்திச் சென்றுள்ளனர். அவர்கள் தமிழ் மக்களுக்கு ஜனநாயகமும் அமைதியும் நிறைந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்காக பாடுபட்ட ஜனநாயகத் தமிழ் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், சாம் தம்பிமுத்து ஆகியோரைப் படுகொலை செய்துள்ளனர். அவர்கள் ராஜீவ் காந்தி, இலங்கை ஜனாதிபதி ஆர்.பிரேமதாச போன்ற உலகத் தலைவர்களையும் கொலை செய்துள்ளனர். அவர்கள் இலங்கை அரசியல்வாதிகளான லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்க, ரஞ்சன் விஜேரத்ன போன்றவர்களையும் கொலை செய்துள்ளனர்.

அவர்கள் ஸ்ரீ மகாபோதி, தலதா மாளிகை, காத்தான்குடி பள்ளிவாசல் போன்ற வழிபாட்டிடங்கள் மீதும், எல்லா மதத்தவர்களினதும் புனித தலங்கள் மீதும் பயங்கரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர். அது மட்டுமின்றி, ஏறாவூர், பள்ளியகொடெல்ல, டொலர் மற்றும் கென்ற் பண்ணைகள் போன்ற



இடங்களில் வசித்த மக்களை – பெண்கள், குழந்தைகள் உட்பட – முழுவதுமாகக் கொன்றுள்ளனர். வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை 24 மணி நேர அவகாசத்தில் பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றினார்கள். அந்த மக்களில் பலர் இன்றும் அகதி முகாம்களில்தான் வாழ்கின்றனர்.

புலிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளை யுத்தப் பிரதேசங்களாக மாற்றியதுடன், அங்கு வாழ்ந்த தமிழ் சிறுவர்களைக் கடத்திச் சென்று அவர்களது கழுத்தில் சைனைட் குப்பிகளைக் கட்டியுள்ளனர். அவர்கள் இலங்கையில் பயங்கரமான தற்கொலைத் தாக்குதல் வழிமுறையை அறிமுகம் செய்ததுடன், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள், பொருளாதாரக் கட்டுமானங்கள் என்பனவற்றின் மீது அவ்வகையான 300 தாக்குதல் வரை நடத்தியும் உள்ளார்கள். அவர்கள் மற்றைய இனத்தவர்கள் மீது இனச்சுத்திகரிப்புச் செய்ததுடன், யுத்த நிறுத்த உடன்படிக்கைகளையும் முறியடித்துள்ளனர்.

இலங்கை இறுதியாக 2009 இல் புலிகளை ஒழித்தது என்பது பயங்கரவாதத்தின் முடிவு அல்ல, இலங்கை மக்களின் விடுதலையின் ஆரம்பமாகும். யுத்தக் கொடுமைகளால் அவதியுற்ற தமிழ் மக்கள் இறுதியாக சமாதானக் காற்றைச் சுவாசிக்க முடிந்தது. அவர்களது பிள்ளைகள் பலவந்தமாக பிடித்துச் செல்லப்படுவது நின்று போனது. சைனைட் குப்பிகளும், துப்பாக்கிகளும் இருந்த இடத்தை பேனையும் பேப்பரும் பிடித்துக் கொண்டது. சமூகங்கள் போர்க் கொடுமைகளில் இருந்து விடுபட்டு தமது வாழ்வை மீளவும் கட்டியெழுப்பத் தொடங்கின.

இருந்தும் இன்றும் கூட, புலம்பெயர் நாடுகளில் சிலர், அவர்கள் இலங்கையில் ஒருபோதும் கால்பதிக்காதவர்கள் அல்லது அந்த இருண்ட நாட்களில் இலங்கையில் வசிக்காதவர்கள், மீண்டும் கடந்தகால பிரிவினைவாத சிந்தனைகளைப் பரப்ப முயல்கின்றனர். அவர்கள் பிரிவினைவாதம் மற்றும் புலிகள் ஒரு விதுலைப் போராளிகள் அமைப்பு போன்ற கற்பனாவாதக் கதைகளைப் பரப்ப முயல்கின்றனர். இந்த தவறான கருத்துக்கள் போலியானதும் ஆபத்தானதும் மட்டுமின்றி, தமிழ் இளைஞர்களின் இன்னொரு தலைமுறையையும் தவறாக வழிநடத்த எடுக்கும் முயற்சியாகும்.

இலங்கை முற்றிலும் ஒரு சரியான நாடு என்று சொல்வதற்கில்லாத போதிலும், எமது அரசியல் சாசனத்தில் எல்லா மக்களினதும் அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்டிருப்பதுடன், ஜனநாயகத்தை நோக்கி முன்னேறுவதற்கும் முயன்று வரும் ஒரு நாடாகும். சில தவறுகள் இருப்பினும் நாம் ஒரே வாழ்விடங்கள், பாடசாலைகள், வேலைத்தலங்கள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றை எமது எதிர்கால வாழ்வுக்காக பங்கிடுபவர்களாக இருக்கிறோம்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள சிலரும், உள்நாட்டில் உள்ள சிலரும் கொண்டுள்ள பிரிவினைவாத வேலைத்திட்டங்களை நிராகரிக்க வேண்டிய காலம் வந்துள்ளது. மாறாக, ஓர் ஐக்கியப்பட்ட, செழிப்பான இலங்கையைக் கட்டியெழுப்புவதில் எம் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியதென்பது, ஒரு குழு இன்னொரு குழுவை வெற்றி கொண்ட நிகழ்வல்ல, அது முழு இலங்கையர்களுக்கும் விடுதலையைக் கொண்டு வந்த நிகழ்வு. பழைய விடயங்களைப் புறம் தள்ளிவிட்டு, ஐக்கியம், ஜனநாயகம், முன்னேற்றம் கொண்ட எதிர்கால இலங்கை என்ற இலக்கை அடைவதற்கு உழைக்க வேண்டிய நேரமிது. நாமும் எதிர்கால சந்ததியினரும் பெருமைப்படக்கூடிய தேசமாக இலங்கையை ஒன்றிணைந்து மீளக் கட்டியெழுப்புவோம்.

# வறுமையை எப்படி அளக்கக் கூடாதென்றால்...

உலக அளவிலான பல அமைப்புகள் இப்போது, 'வறுமை' என்று அவர்களால் சொல்லப்படும் நிலைமையை அளவிடுகிற வேலையில் இறங்கியிருக்கின்றன. இதற்காகப் "பன்முகப் பரிமாண வறுமை" (Multidimensional Poverty) என்பதாக ஓர் அளவை முறை வந்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UNDP), ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைப்பகம் (Oxford Poverty and Human Development Initiative - OPHI) ஆகிய அமைப்புகள் இதைக் கொண்டுவந்துள்ளன. இத்தகைய அளவை முறைகள் உண்மையிலேயே வறுமையை அளப்பதில்லை, மாறாக, நவீன தாராளமய முதலாளித்துவத்தைச் சிங்காரித்துக் காட்டுவதில்தான் முடிகின்றன.

உலக மக்கள்தொகையில் 'தீவிர வறுமை' நிலையில் வாழ்கிறவர்கள் 1990களில் 30 சதவீதமாக இருந்தார்கள், 2022 இல் அவர்கள் 10 சதவீதமாகக் குறைந்துவிட்டார்கள் என்று உலக வங்கி மதிப்பிட்டிருக்கிறது (தீவிர வறுமை என்றால் 2011 ஆம் ஆண்டு நிலவரப்படி தனிநபரின் தினசரிச் செலவு 1.90 டொலருக்குக் குறைவாக இருப்பதாகும்). அதாவது கோடிக்கணக்கான மக்கள் அதற்கு மேல் சம்பாதிக்கிறார்கள் என்பதால் அவர்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள், என்று சொல்ல வருகிறார்கள்.

உலக வங்கியின் அளவுகோலில் மூன்று அடிப்படையான பிரச்சினைகள் இருக்கின்றன. முதலாவதாக, ஒருவரது கையிருப்பில் உள்ள சொத்து நிலையைப் பற்றி இது எதுவும் சொல்வதில்லை, அவருடைய வருமான நிலையை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்கிறது. இரண்டாவதாக, வருமானத்திற்கான பதிலியாக செலவை எடுத்துக்கொள்கிறது. மூன்றாவதாக, வாழ்க்கைச் செலவுகள் உண்மையாக அதிகரித்திருப்பதைக் குறைத்து மதிப்பிடுகிற விலைவாசிக் குறியீட்டு எண்ணைப் (Price-Index) பயன்படுத்துகிறது.

### வரத்தும் இருப்பும்

அக்கறையுள்ள வறுமை மதிப்பீடு என்றால் அதில் வருமானம் சார்ந்த 'வரத்து', சொத்துடைமை சார்ந்த 'இருப்பு' ஆகிய இரண்டு



பரிமாணங்களும் இருந்தாக வேண்டும். மதிப்பீடு செய்யப்படுகிறவர்களின் உண்மை வருமானம் இரண்டு குறிப்பிட்ட காலக்கட்டங்களுக்கு இடையே ஒரே மாதிரியாக இருந்து, இரண்டாவது காலக்கட்டத்தில் அவர்கள் தங்களது சொத்துக்களை இழந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். இவ்வாறு சொத்துக்களை இழந்தாலும், வருமானம் மாறாமல் இருக்கிறது என்பதற்காக அவர்களை வறுமையில் விழுந்துவிட்டவர்களாகக் காணத் தவறுவது பரிகாசத்துக்குரியதேயாகும்.

பிரபாத் பட்நாயக்

மக்களின் சொத்து நிலவரம் பற்றி உலக வங்கியின் மதிப்பீடு எதுவும் சொல்லவில்லை. நவீன தாராளமய முதலாளித்துவ ஏற்பாட்டில் இது அப்பட்டமாக விடுபட்டிருக்கிறது. தனி மனிதர்கள் அவர்களுடைய சொத்துடைமைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும் நிகழ்வுப்போக்கு கட்டுக்கடங்காததாக இருக்கும் நிலையில் உலக வங்கி மதிப்பீட்டில் சொத்து நிலவரம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சொத்துடைமையிலிருந்து அப்புறப்படுத்தப்படுவது இவ்வாறு கட்டுக்கடங்காமல் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது "கோடிக்கணக்கானோர் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று கூறுவது முரண்பாட்டின் உச்சமாகும்.

இரண்டாவதாக, உண்மையான வருமான நிலவரமும் கூட இந்த மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் வருமானம் குறித்த தரவுகளே கிடைப்பதில்லை. ஆனால், செலவுக்கான தரவுகள் எளிதாகக் கிடைக்கின்றன. ஆகவே, இந்த மதிப்பீட்டில் வரவுக்கான பதிலியாக செலவை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### அபத்தமான முடிவு

மக்களுடைய வருமானம் கீழிறங்கினாலுமே கூட, அவர்கள் சொத்துகளை விற்பதன் மூலமோ கடன் வாங்கியோ முன் போலவே செலவுகளை சமாளித்துக்கொண்டுதான் இருப்பார்கள். இதை வைத்து, அவர்களின் செலவுகளில் மாற்றம் இல்லை என்பதால் அவர்கள் ஏழைகளாகிவிடவில்லை என்ற முடிவுக்கு வருவது அபத்தம். உண்மையில், 'வரத்து', 'இருப்பு' ஆகிய இரண்டு வகைகளிலுமே அவர்கள் ஏழைகளாகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் செலவை ஓர் அடிப்படையாக வைத்துக்கொண்டு அளவிடுவது அவர்கள் முன்போலவே இருக்கிறார்கள் என்றுதான் காட்டும்.

மூன்றாவதாக, இந்தியா போன்ற நாடுகளில் அவ்வப்போது மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ளப்படும் மாதிரி ஆய்வுகளின் அடிப்படையில், குடும்பங்களின் பணச் செலவுகள் பற்றிய தரவுகளைக் கொண்டு உண்மைச் செலவுகளை மதிப்பிடுவதும் கோளாறான வழியாகும்.

இத்தகைய பெயரளவிலான செலவுகளைக் குறைத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் விலைவாசிப் புள்ளி, உண்மையில் அதிகரித்துவிட்ட வாழ்க்கைச் செலவுகளைக் குறைத்து

மதிப்பிடுகிறது. மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் அடிப்படை ஆண்டில் நுகரப்படும் பல்வேறு பொருள்களுக்கான தனிப்பட்ட விலை மாறுபாடுகளை ஒப்பீடு செய்ததன் நிறை சராசரியாக விலைவாசிப் புள்ளி பயன்படுத்தப்படுகிறது. இதுவும் தவறான முடிவுகளையே தரும். ஏனெனில், குறிப்பிட்ட அடிப்படை ஆண்டில் நுகரப்பட்ட பொருள்கள் இப்போது வாங்க முடியாமல் போயிருக்கும். அதனால் பல்வேறு பொருள்களின் ஒட்டு மொத்த நுகர்வில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்.

எடுத்துக்காட்டாக, நவீன தாராளமயமாக்கலின் கீழ் முன்பு அரசுத்துறைகளால் வழங்கப்பட்டு வந்த கல்வி, மருத்துவம் போன்ற பல சேவைகளில் தனியார் நிறுவனங்கள் புகுந்துவிட்டன. இதனால் மக்கள் இந்தச் சேவைகளுக்காகச் செய்யும் செலவுகள் பல மடங்கு அதிகரித்திருக்கின்றன. ஆனால் விலைவாசிப் புள்ளி கணக்கெடுப்பில் இது கண்டுகொள்ளப்படவில்லை.

மருத்துவத்தை எடுத்துக்கொண்டால், மதிப்பீட்டிற்கான அடிப்படை ஆண்டில் அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு ரூபா 1000 செலவானது என்றால், இப்போது அங்கே ரூபா 2000 செலவாகிறது. ஆகவே மருத்துவச் செலவு இரண்டு மடங்காகியிருக்கிறது என்று விலைவாசிப் புள்ளியில் கூறப்படும். ஆனால், அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை அதிகரிக்காமல் அப்படியே இருக்கிறது அல்லது குறைந்திருக்கிறது என்கிற நிலையில், மக்கள் தனியார் மருத்துவமனைகளை நாட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறார்கள். அங்கே அதே அறுவை சிகிச்சைக்கு 10,000 ரூபாய் செலவாகிறது. இதை விலைவாசிப் புள்ளி கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

சுருக்கமாகச் சொல்வதென்றால், உண்மையான வாழ்க்கைச் செலவு, விலைவாசிப் புள்ளியில் காட்டப்பட்டிருப்பதை விடவும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. குறைத்துக் காட்டும் அதிகாரப்பூர்வமான விலைவாசிப் புள்ளியை வைத்துக்கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறிவிட்டதாக மிகைப்படுத்திக் காட்டப்படுகிறது. வறுமை நிலவரமோ மிகவும் குறைத்துக் காட்டப்படுகிறது.

**இரண்டு வழிகள்**

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதால் பிழியப்படும்போதெல்லாம், மக்கள் குறைந்தது இரண்டு வழிகளைக் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒன்று – கையிலுள்ள உடைமைகளை விற்பார்கள் அல்லது கடன் வாங்குவார்கள் இரண்டு – அன்றாட நுகர்வுப் பொருள்களைக் கண்டிப்பாகத் தேவைப்படுவது, அப்படியொன்றும் தேவைப்படாதது என்று பிரித்து, முதலாவதற்கு முன்னுரிமை கொடுத்து அவற்றை மட்டும் வாங்குவார்கள்.

இந்தியாவில் நாட்டில் மருத்துவச் செலவுகள், குழந்தைகளின் கல்விச் செலவுகள் இரண்டுமே அதிகரித்துவிட்ட நிலையில், அதைச் சமாளிப்பதற்கு இந்த இரண்டு வழிகளுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இந்தியக் குடும்பங்களின் நிகர சொத்து நிலவரம், குறிப்பாகக் கிராமப் பகுதிகளில், குறிப்பிடத்தக்க அளவுக்கு மோசமாகியுள்ளது. அதாவது சொத்துகளை விற்றிருக்கிறார்கள். சத்துள்ள உணவுகளைச் சிக்கனமாக எடுத்துக்கொள்வதால் பெரிய பிரச்சினை ஏற்பட்டுவிடாது என்ற தவறான கருத்தின் அடிப்படையில் குடும்பங்களில் ஊட்டச் சத்துள்ள உண்டி சுருக்கப்படுகிறது.

**ஊரகக் காட்சியைக் காண்போம்**

2018 ஜூன் இறுதி நிலவரத்தைத் தெரிவிப்பது 2019 ஆம் ஆண்டின் அகில இந்திய கடன் மற்றும் முதலீடுகள் ஆய்வறிக்கை (All India Debt and Investment Survey - AIDIS). 2012 ஜூன் இறுதி நிலவரத்தைத் தெரிவிப்பது 2013 ஆம் ஆண்டின் அகில இந்திய ஊரகக் கடன் மற்றும் முதலீடுகள் ஆய்வறிக்கை (All India Rural Debt and Investment Survey - AIRDIS). இந்த இரண்டு அறிக்கைகளையும் ஒப்பிடுகையில் பின்வரும் மூன்று நிலைமைகள் தெரிய வருகின்றன: ஊரகப் பகுதிகளில் 11 சதவீதத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பிந்தைய காலக்கட்டத்தில் கடனாளியாகியுள்ளன. கடனாளியான ஊரகக் குடும்பங்கள் ஒவ்வொன்றின் சராசரிக் கடன் 43 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அடிப்படை ஆண்டு, ஆய்வுக்கான ஆண்டு ஆகிய இரண்டு காலக்கட்டங்களிலுமே, வேளாண் சாகுபடியில் ஈடுபடுகிற ஒவ்வொரு குடும்பத்தின் சராசரி சொத்து மதிப்பு 1 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இந்தியாவின் நகர்ப்புறக் காட்சியும் பெருமளவுக்கு இதே போன்றுதான் இருக்கிறது. ஒவ்வொரு நகர்ப்புறக் குடும்பத்திலும் சராசரி சொத்து மதிப்பு சரிவடைந்திருக்கிறது. சொந்தத் தொழில் செய்கிறவர்களின் குடும்பங்களில் 29 சதவீதம், மற்றவர்களின் குடும்பங்களில் 3 சதவீதம் சரிவு ஏற்பட்டிருக்கிறது. கடனில் சிக்கிய குடும்பங்களின் சதவீதம் கிட்டத்தட்ட முன்போலவே இருக்க, ஒவ்வொரு கடனாளிக் குடும்பத்தின் சராசரிக் கடன் இரண்டு காலக்கட்டங்களில் 24 சதவீதம் அதிகரித்திருக்கிறது. ஓம், ஆகப் பெரும்பாலான இந்தியக் குடும்பங்களின் நிகர சொத்து கணிசமாகக் குறைந்துவிட்டது.

நுகர்வைச் சுருக்கிக்கொள்ளும் இரண்டாவது வழிமுறையைத் தேர்ந்தெடுப்பதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. ஊரகப் பகுதிகளில், ஒரு நாளைக்கு ஒரு மனிதருக்கு 2200 கலோரி எரியாற்றல் தேவை என முன்பிருந்த திட்டக்குழுவால் மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த கலோரி அளவைப் பெற முடியாத கிராமப்புற மக்கள் 1993–94 இல் 58 சதவீதம் பேர் இருந்தார்கள். 2011–12 இல் அவர்கள் 68 சதவீதமாக அதிகரித்துவிட்டார்கள். நகர்ப்புறங்களைப் பொறுத்த மட்டில் ஒரு நாளில் ஒருவருக்கு 2100 கலோரி எரியாற்றல் தேவை. இந்த அளவைப் பெற முடியாதவர்கள் 57 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக அதிகரித்துவிட்டார்கள்.

2017–18 ஆம் ஆண்டுக்கான தேசிய மாதிரி ஆய்வு (National Sample Survey - NSS) அனைத்துப் பொருள்களுக்கும் சேவைகளுக்குமான உண்மைச் செலவுகள் பெரிதும் சரிவடைந்துவிட்டதைத் தெரிவிக்கிறது. எந்த அளவுக்கு அந்த ஆய்வறிக்கை அதிர்ச்சியளித்தது என்றால், பொது வெளியிலிருந்து அதை ஒன்றிய பாரதிய ஜனதாக்கட்சி அரசு அவசரமாக அப்புறப்படுத்துகிற அளவுக்கு! அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டதற்கு முந்தைய நிலவரம் பற்றிக் கிடைக்கக்கூடிய தரவுகளிலிருந்து (ஊட்டச்சத்து உணவுகளுக்கான உண்மையான செலவில் மாற்றமில்லை என்று வைத்துக்கொள்வோமானால்), 2011–12 ஆம் ஆண்டில் நகர்ப்புறம் சார்ந்த செலவுகள் கிட்டத்தட்ட ஒரே அளவாக இருந்த நிலையில், ஊரகப் பகுதிகளில் 80 சதவீதம் அதிகரித்துவிட்டது.

**விளம்பரத்துக்கு சாதகமாக**

உண்மை நிலவரம் இப்படி இருக்கிறபோது, உலக வங்கி "தீவிர வறுமை" என்பதற்கான தனது அளவுகோலாக, தினசரிச் செலவு அளவை 1.90 டொலருக்குக் குறைவாக வரையறுத்துக்கொண்டுள்ளது. இதற்கு 2011 ஆம் ஆண்டு நிலவரப்படி பிற நாடுகளுடனான பணப் பரிமாற்றத்துடன் இணைந்த வாங்கும் சக்தியை அடிப்படையாக வைத்துக்கொண்டுள்ளது. அதன்படி, இந்தியாவின் "தீவிர வறுமை" நிலை 2011–12 ஆம் ஆண்டில் 12 சதவீதமாக இருந்தது என்றும், அது 2022–23 ஆம் ஆண்டில் வெறும் 2 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்றும் சொல்கிறது. உலக வங்கியின் 1.90 டொலர் என்ற அளவுகோல், இந்தியாவின் உள்நாட்டுப் பண மதிப்பில் நாளொன்றுக்கு 153 ரூபாயாகிறது. இதுதான் அனைத்துச் செலவுகளையும் சமாளிப்பதற்கான அளவாம்.

பல ஏழை நாடுகளின் அரசுகள், வறுமைக்கோடு என மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்துகிற அளவுகோலைத்தான் உலக வங்கி எடுத்துக்கொண்டு, சராசரிச் செலவை வரையறுத்திருக்கிறது. அந்த அரசுகள் இந்த அளவுகோலைக் கையாளுவது கூட உலக வங்கியின் வழிகாட்டுதலில்தான்! இது சுயேச்சையான மதிப்பீடல்ல. இந்த நாடுகளின் அதிகாரப்பூர்வ வறுமை மதிப்பீடுகளில் இருக்கும் குறைபாடுகள் இதிலேயும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பெயரளவான செலவுகளைக் குறைத்துக் காட்டுவதற்காக விலைவாசிப் புள்ளியில், அதிகரித்துவிட்ட வாழ்க்கைச் செலவுகள் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கின்றன.

பல நாடுகளின் அரசுகள், வறுமையைக் குறைத்துவிட்டதாக அல்லது அதை ஒழித்தேவிட்டதாகப் விளம்பரப்படுத்திக்கொள்வதற்கு அங்கீகார அட்டை தருவதாகவே உலக வங்கியின் இந்த வறுமை அளப்புச் செயல் இருக்கிறது. ஆக, "கோடிக்கணக்கானோர் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள்" என்கிற பேச்சுகள் எல்லாம் கொடூரமான நகைச்சுவையேயாகும்.

# பொதுத்துறையின் அளவைக் குறைக்க வேண்டாம்!

*-கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்!!*

**பொது**த்துறையின் அளவைக் குறைக்க வேண்டாம் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி இது சம்பந்தமாக விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"திறைசேரி இப்பொழுதுள்ள தொகை செலவினத்தை எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர முடியாது" என ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலன்கமுவ (Duminda Hulangamuwa) எச்சரிக்கை விடுத்திருக்கிறார். தற்போது 1.3 மில்லியன் தொகையாக இருக்கும் அரச ஊழியர்களை 750,000 ஆகக் குறைப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் எனவும் அவர் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அந்த ஆள் குறைப்பை கணனி பயிற்சி பெற்ற வேலைச்சக்தியின் (digitalisation) மூலம் ஈடு செய்யலாம் எனவும் ஆலோசனை கூறியிருக்கிறார்.

ஆனால் அவரது கூற்று தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினதும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினதும் கொள்கைப் பிரகடனத்துக்கு எதிராக இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி ஓகஸ்ட் மாதத்தில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையின் 196 பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

"அரசாங்க சேவையிலுள்ள ஆட்களின் தொகையைக் குறைப்பதற்குப் பதிலாக, தொழிலாளர்களின் திறமை மற்றும் தகைமை என்பனவற்றை உடனடியாக மதிப்பீடு செய்வதன் மூலம் அவர்களை மீள் ஒழுங்கிற்கு உட்படுத்தி புதிய சமூக – பொருளாதார இலக்குகளை எய்தி அரசாங்கத்தின் ஆக்கத்திறன் அதிகரிக்கப்படும்".

கடந்த காலத்தில் ஆள் குறைப்பு செய்வதற்கு எடுத்த முயற்சிகள் காரணமாக, பொது விநியோக சேவை பாதிக்கப்பட்டதுடன், செலவுகளும் அதிகரித்து, சில வேளைகளில் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. நிர்வாகத்தால் வேலைச் சக்தியைக் குறைப்பதன் மூலம் ஆற்றல் குறைந்துவிடும். ஒவ்வொரு திணைக்களத்தினதும், நிறுவனத்தினதும், வேலைகளை சரியாக ஆராய்வதன் மூலம் அரச துறை எதிர்பார்க்கும் ஆற்றலை மேம்படுத்த முடியும். பணியில் உள்ளவர்களுக்கு அதே பணியில் பயிற்சி அளிப்பதன் மூலம் அல்லது வேறு துறையில் மறு பயிற்சி அளிப்பதன் மூலம் நிர்வாகஸ்தர்கள் தேவையை ஈடு செய்யலாம்.

ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகரின் சொற்களில் தெரிவது என்னவென்றால், வேறு மாற்று வழிகள் பற்றி ஆராயாமல் இலட்சக்கணக்கான ஊழியர்களை வேலை நீக்கம் செய்தால், அது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு பங்கமேற்படுத்தி விடும். முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தொடர்வதன் மூலம், அந்த உடன்படிக்கையை "பிசாசுடன் செய்த உடன்படிக்கை" என முன்னர் தேசிய மக்கள் சக்தி வர்ணித்ததில் இருந்து தப்பிவிட முடியாது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மீறி இலட்சக்கணக்கான அரச ஊழியர்களை நடுத்தெருவில் விடுவதற்கு முயற்சிப்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. அரச ஊழியர்களை வேலை நீக்கம் செய்யாது, அரச துறையை வலுவுள்ளதாக்குவதற்கு மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை பாதுகாக்கும்படி வலியுறுத்துவதற்கு நாட்டு மக்களும், தொழிற்சங்கங்களும், ஏனைய முற்போக்கு சக்திகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

விட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும், தேசிய மக்கள் சக்தியும் ஆட்சிக்கு வந்து சில வாரங்களே ஆகின்றன. ஆனால் அவர்கள் அவநம்பிக்கையும் பசியும் கொண்ட சாதாரண மக்களின் வன்முறையான எதிர்ப்பை விரைவில் சந்திக்கப் போகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. அரசாங்கம் நிலைமையைச் சீர்செய்யும் பாதையில் பயணிக்காவிட்டால், பழைய மார்க்சிச கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலையே அவர்களுக்கும் ஏற்படும்.

(கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெயிலி மிரர்' ஆங்கிலத் தினசரியின் டிசம்பர் 4ஆம் திகதி வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சம்)

# தேசிய மக்கள் சக்தி ஒரு ஏகாதிபத்திய சார்பு வலதுசாரி பாசிச கட்சி!




ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவின் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற தேர்தலில் நாடு தழுவிய வெற்றியைப் பெற்றுள்ளது. 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் அதற்கு 159 பேர் கிடைத்துள்ளனர்.

இந்த அரசாங்கத்தை “இடதுசாரி” அல்லது “சோசலிஸ்ட்” அரசாங்கம் என்றும், திசநாயக்கவை ஒரு “மார்க்சிஸ்ட்” என்றும் சில இலங்கை மற்றும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. இவையெல்லாம் பொய்கள். ஜே.வி.பி. 2019இல் உருவாக்கிய தேசிய மக்கள் சக்தி என்பது ஒரு வலதுசாரி, ஏகாதிபத்திய சார்பு கட்சியாகும். 1960களில் ஜே.வி.பி. உருவான காலத்திலிருந்து அது ஒரு இலங்கை தேசியவாத, சிங்கள பேரினவாத கட்சியாக இருந்து வந்துள்ளது.

இலங்கையின் பாரம்பரிய அரசியல் அமைப்பு பின்பற்றிய முதலாளித்துவக் கொள்கைகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்த சூழலை ஜே.வி.பி. பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

ஜனாதிபதி திசநாயக்கவும் அவரது அரசாங்கமும், ஊழலை ஒழித்துக்கட்டி, நாட்டில் தேசிய மீள் எழுச்சியை உருவாக்கப்போவதாக சூளுரைத்தனர். ஆனால் உண்மை என்னவெனில், அவரது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள ‘சிக்கன நடவடிக்கைகள்’ மூலம் இலங்கை தொழிலாளி வர்க்கத்துக்கும், ஏழை மக்களுக்கும் எதிராகவே செயற்படுவார்கள்.

*தீபல் ஜெயசேகர*
(Deepal Jayasekera)

திசநாயக்கவும் அவரது கட்சியும் அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்குடன் (Julie Chung) அடிக்கடி சந்திப்புகளை நடத்தியது உட்பட ஆளும் வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதற்கு கடந்த பல வருடங்களாக பல முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பாசிசவாதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதும், ஜனாதிபதி திசநாயக்க உடனடியாக வாழ்த்துச் செய்தி அனுப்பியதுடன், அவர் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்துடன் ஒத்துழைப்பதாகவும் உறுதியளித்தார்.

திசநாயக்கவும் அவரது கட்சியும் சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன செயல் திட்டங்களிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாக்கப்போவதாக தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும், தற்பொழுது சர்வதேச நாணய நிதியத்தின் முழுத் திட்டங்களையும் நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளனர். அந்த நடவடிக்கைகள் ஆவன:

– 400 இற்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் அல்லது மறுசீரமைத்தல்.
– பொதுத்துறையில் (அரச துறை) பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை இல்லாதொழித்தல்.
– வரிகளை மேலும் அதிகரித்தல்.
– இலவச கல்வி மற்றும் வைத்திய வசதிகளை இல்லாதொழித்தல்.

திசநாயக்கவும் அவரது கட்சியும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் இல்லாதொழித்து ‘ஜனநாயக’ சீர்திருத்தங்களை மேற்கொள்ளப்போவதாகச் சொல்லி வந்தனர். ஆனால் கோப்பரேட் ஊடகங்களின் உதவியுடன் மறைமுகமாக தொழிலாளி வர்க்கத்தின் சமூக – ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். 14 இலட்சம் அரச ஊழியர்களின் சம்பளவுயர்வு கோரிக்கையையும் நிராகரித்து வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றியை இலங்கை மற்றும் சர்வதேச ஊடகங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன.

தொழிலாளி வர்க்கமும் இளைஞர்களும் தேசிய மக்கள் சக்தி முன்வைக்கும் “அமைப்புமுறைக்கெதிரான” சுலோகத்தாலும், போலி வாக்குறுதிகளாலும் கவரப்பட்டாலும், அவர்களது அரசு பெரும் வர்த்தகர்களுக்குச் சார்பான, ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக, இலங்கை மற்றும் உலக முதலாளித்துவ சக்திகளின் திட்டங்களுக்கு அமைவாகவே செயற்படுவார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்க மற்றும் அது முன்னெடுக்கும் உலக யுத்த சூழ்நிலைகளின் கீழேயே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றி ஈட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவும் நேட்டோவும் ரஸ்யாவுடன் நடத்தும் யுத்தம், இஸ்ரேல் காசாவில் நடத்தும் இனவொழிப்பு யுத்தமும் அதை மத்திய கிழக்கு யுத்தமாக விஸ்தரிக்கும் முயற்சியும், அமெரிக்கா சீனா மீது தாக்குதல் நடத்த எடுக்கும்

முயற்சியும்தான் இந்த யுத்தத்தின் மூன்று முனைகள் ஆகும்.

விசேடமாக இலங்கை கடல்வழிப் போக்குவரத்தில் ஒரு கேந்திர இடத்தில் இருப்பதால், சீன எதிர்ப்பு யுத்தத்தில் முழு இந்து சமுத்திரப் பிராந்தியத்தையும் தமக்குச் சாதகமாக மையப்படுத்துவதில் அமெரிக்காவும் அதன் தென்னாசிய கூட்டாளியான இந்தியாவும் கூட்டாகச் செயல்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் ஜனாதிபதி திசநாயக்க அமெரிக்காவின் பசுபிக் கடற்படை தளபதியை வரவேற்றது உட்பட, சீனாவுக்கு எதிரான பூகோள தந்திரோபாயக் கூட்டணிக்கு அமைவாக முன்னாளைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையை மாற்றியமைத்ததை திசநாயக்கவும் தொடர்கிறார். இந்த விடயம் பொதுமக்கள் அபிப்பிராயமோ அல்லது ஆதரவோ இன்றி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சி (Socialist Equality Party) ஜே.வி.பியும் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும், ஒரு வலதுசாரி சிங்கள பேரினவாதக் கட்சி என்பதையும், வரலாற்று ரீதியாக அது குட்டி முதலாளித்துவ அடிப்படையைக் கொண்டது என்பதையும், அதற்கு பாசிசத்துடன்தான் உறவேயொழிய சோசலிசத்துடன் எந்த உறவும் கிடையாது என்பதையும், இலங்கையின் தொழிலாளி வர்க்கத்துக்கும், ஏழை எளிய மக்களுக்கும் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

(இந்தக் கட்டுரை உலக சோசலிச வலைத்தளம் - World Socialist Web site - என்ற ரொட்ஸ்கியவாத இணையத்தளத்தில் வந்த கட்டுரையின் சுருக்கமாகும்)

# நேட்டோவின் யுத்தக் கொள்கை நிறுத்தப்பட வேண்டும்!

**ஏ**காதிபத்திய இராணுவக் கூட்டணியான நேட்டோவின் (NATO) யுத்தக் கொள்கை நிறுத்தப்பட வேண்டும் என ஜேர்மனி, ஸ்பெயின், இத்தாலி, உக்ரைன், பொகேமியா மற்றும் மொரேவியா, ஹங்கேரி, சுவிற்சலாந்து, ரஸ்யா ஆகிய நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தி உள்ளன. இந்த எட்டு கட்சிகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நேட்டோவினதும் அதன் தலைமைச் சக்தியான அமெரிக்காவினதும் இராணுவத்தளங்கள் பல நாடுகளில் இருப்பதுடன், அவற்றில் சில தளங்களில் அமெரிக்க அணுவாயுதங்களும் வைக்கப்பட்டுள்ளன. அவை எல்லா நாடுகளுக்கும் உடனடி ஆபத்தாக உள்ளன. அது மாத்திரமின்றி, 2025 முதல் மேலதிகமாக நடுத்தர SM-6 ஏவுகணைகள், Dark Eagle hypersonic ஏவுகணைகள், ஜேர்மனியின் குருசு என்பனவற்றையும் நிறுத்தி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் ஆயுதங்கள் அனைத்தும் மூலோபாய சம நிலைக்கு அச்சுறுத்தல் விடுபவை. இந்த ஏற்பாடுகள் அனைத்தும் எதிர்காலத்தில் ஒரு ஆணுவாயுதப் போர் அபாயத்துக்கு வழிவகுப்பவை.

சோசலிச நாடுகளைக் குறி வைத்து உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பு, தொடர்ந்து ஓர் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தக் கூட்டணியாக இருந்து வருகிறது. சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் சோசலிசம் தோற்கடிக்கப்பட்ட பின்பு, நேட்டோ ரஸ்ய எல்லை வரை தனது விஸ்தரிப்பைத் தொடர்கிறது. அந்த நோக்கத்துடன் 2014இல் தேசியவாத மற்றும் பாசிச சக்திகளால் உக்ரைனில் சதி ஒன்று அரங்கேற்றப்பட்டது. அதற்கு அந்த நாட்டின் சில பகுதிகளில் எதிர்ப்பு ஏற்பட்ட பொழுது, நேட்டோ தனது ஆயுதங்களினதும் பணத்தினதும் உதவியுடன் ரஸ்யாவுடன் போரிடும் ஒரு நாடாக உக்ரைனை மாற்றியுள்ளது.

2024 ஒக்ரோபரில் “இரண்டு சக நான்கு ஒப்பந்தத்தை” மீறி நேட்டோ ஜேர்மனியின் பால்டிக் துறைமுகமான றொஸ்றொக்கில் (Rostock) நேட்டோ மூலோபாய தலைமை அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது.

இஸ்ரேல் காஸாவில் மேற்கொண்டு வரும் இனப்படுகொலையையும், லெபனானில் மேற்கொண்டு வரும் பயங்கரவாத யுத்தத்தையும் நேட்டோ அரசியல் ரீதியாகவும், ஆயுதங்கள் வழங்கியும் ஆதரிக்கின்றது.

ஆசியாவில் கூட நேட்டோ தாய்வானைப் பயன்படுத்தி மக்கள் சீனக் குடியரசுக்கு எதிராக ஆக்கிரமிப்பு கொள்கையைப் பின்பற்றுவதுடன், “ஒக்ஸ்சஸ்” (AUCUS) என்ற ஆக்கிரமிப்புவாத இராணுவக் கூட்டணியை விஸ்தரித்து வருகின்றது.

நேட்டோ நாடுகள் ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் தமது ஏகாதிபத்திய நலன்களைப் பேணுவதற்கான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அமெரிக்காவினதும் அதன் கூட்டாளி நாடுகளினதும் ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்காக நேட்டோ பின்பற்றும் யுத்தவாதக் கொள்கையால் மற்றைய நாடுகளின் மக்கள் பாதிக்கப்படுவதுடன், பல மில்லியன் மக்களின் மரணம், உலக சமாதானத்துக்கு ஆபத்து மற்றும் உலகளாவிய வறுமை என்பனவும் ஏற்படக் காரணமாகிறது.

நேட்டோவின் யுத்தக் கொள்கைக்கு எதிராக எமது நாடுகள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என நாம் கோருகின்றோம்.

ஐரோப்பாவில் சகல விதமான அமெரிக்க அணுவாயுதங்களும் நீக்கப்பட வேண்டும் எனக் கோருகின்றோம்.

ஜேர்மனியில் புதிதாக நடுத்தர ஏவுகணைகளை நிலை நிறுத்துவதை கைவிடும்படி வலியுறுத்துகின்றோம்.

நேட்டோவின் எல்லா வசதிகளையும் அகற்றும்படி கோருகின்றோம்.

**ஒப்பம் இடுபவர்கள்: (Signatories)**

Communist Party of Bohemia and Moravia
German Communist Party
Hungarian Workers' Party
Communist Party (Italy)
Communist Party of the Russian Federation
Communist Party of the Peoples of Spain
Communist Party (Switzerland)
Communist Party of Ukraine

## *சீனாவின் மக்கள் தொகை தொடர்ந்து 3வது ஆண்டாக சரிவு*

**சீ**னாவின் மக்கள் தொகை தொடர்ந்து 3வது ஆண்டாக குறைந்துள்ளது என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஒரு காலத்தில் உலகில் அதிகப்படியான மக்கள் தொகை கொண்ட நாடு என்ற இடத்தில் இருந்த சீனா, பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கடுமையான நடவடிக்கைகள் மூலம் மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக உலகளவில் 2வது மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவில், குழந்தை பிறப்பு விகிதம், கடந்த சில ஆண்டுகளாக சரிந்து வருகிறது.

குழந்தைப் பராமரிப்பு மற்றும் கல்விக்கான அதிகச் செலவு, வேலையின்மை தான், சீனா

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துள்ளார் சீனத் தூதுவர்!

சீன நிதியுதவியின் கீழ் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட பாரிய திட்டங்களை "வெள்ளை யானைகள்" என சிலர் குற்றம் சுமத்திய போதிலும், அந்த திட்டங்கள் அனைத்தும் முன்னாள் அரசாங்கங்களின் கோரிக்கைக்கு அமைவாகவே நிர்மாணிக்கப்பட்டவையாகும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் (Qi Zhenhong) தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே தூதுவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் ஊடகப் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து சீன நிதியுதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கை தரப்பு மோசமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டதால் சில திட்டங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என தூதுவர் தெரிவித்தார்.

உதாரணமாக தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள தாமரை கோபுரத் திட்டம் தற்போது இலாபம் ஈட்ட ஆரம்பித்துள்ளதுடன், அது இலங்கையின் அடையாளமாக மாறியுள்ளதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா முதலீடு செய்துள்ள



Qi Zhenhong

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் என்பன இலங்கை அரசாங்கத்திற்கு பெருமளவு வருமானத்தை கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக கொழும்பு துறைமுக நகரத் திட்டம் முழுக்க முழுக்க சீனாவின் முதலீடு என்று சுட்டிக்காட்டிய தூதுவர், இலங்கையினால் அந்தத் திட்டத்துக்கு எந்தப் பணமும் செலவிடப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

சிலர் சீனக் கடன்கள் மற்றும் முதலீடுகளை, "கடன் பொறி" என்று கூறினாலும், அந்த முதலீடுகள் இலங்கையுடனான சீனாவின் வலுவான நட்புறவின் அடிப்படையில் செய்யப்பட்டவை என்றும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் சுதந்திர நாடாக எழுந்து நிற்க இலங்கைக்கு சீனா நிதியுதவி வழங்கியதாகவும், புதிய அரசாங்கத்தின் கீழ் சீன – இலங்கை உறவுகள் புதிய அத்தியாயத்தில் பிரவேசிக்கும் எனவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 7 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் இதுவரையில் ஏன் கைச்சாத்திடப்படவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்கு பதிலளித்த அவர், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஊடாக இலங்கை சந்தையை சீனா ஆக்கிரமிக்கும் என்ற தவறான அச்சம் நிலவுவதாக தெரிவித்தார்.

சுதந்திர ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், ஒரு வருடத்தின் பின்னர் பாதகமான விடயங்கள் இருப்பின் அதனைத் திருத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் சீனத் தூதுவர் சி சென்ஹொங் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை எதிர்கொண்ட சவால்களின் போதும், கொவிட் தொற்றுநோய் மற்றும் இலங்கை எதிர்கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் அனர்த்த நிலைமைகளின் போது எவ்வாறு இலங்கைக்கு ஆதரவளித்ததோ அதேபோன்று எதிர்காலத்திலும் சீனா இலங்கைக்கு உண்மையான நண்பனாக ஆதரிக்கும் என தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

---

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

இருப்பினும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசு முதல் கட்ட நடவடிக்கையை எடுத்துள்ளது. தவறு செய்யும் ஓட்டுநர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளனர். இது ஒரு சிறிய நடவடிக்கை, ஆனால் முதல் படி. தனியாருக்குச் சொந்தமான பேருந்து சாரதிகள், முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் அரசியல்வாதிகளின் சாரதிகள் ஆகியோர் தங்களுக்கென்று ஒரு சட்டத்தை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தண்டனை விலக்களிப்புடன் சட்டத்தை மீறியுள்ளார்கள். தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஒருவர், ஓட்டுநர்கள் அனுபவித்து வந்த தண்டனை விலக்களிப்பினை வாபஸ் பெற்றால், தங்களது பேருந்துகளை வீதிகளில் இருந்து அகற்றிவிடுவேன் என்று கூட மிரட்டியுள்ளார்!

அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டிய அதேவேளை, அது அவர்களது உற்பத்திக்குரிய வெகுமானம் பெறும் விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்துவதாக இருக்க முடியாது. நுகர்வோர் சுரண்டப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், விவசாய சமூகம் சிறந்த ஊதியத்தைப் பெற உதவும் ஒரு ஆதரவு கட்டமைப்பை உள்ளடக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். விலையைக் குறைப்பதற்காக இறக்குமதி செய்வது போன்ற விரைவான சரிசெய்தல் நடவடிக்கைகள் தீர்வாகாது.


அரிசியின் விலையில் நெருக்குவாரங்களை ஏற்படுத்துவதும், தில்லுமுல்லு செய்வதும் தகர்க்கப்பட வேண்டும். விவசாயப் பின்னணியில் இருந்து வந்த எங்களது ஜனாதிபதியும் அவரது குழுவினரும் ஆட்சிக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே தங்கள் வியூகங்களைத் திட்டமிட்டிருக்க வேண்டும்.

விரைவான திருத்தங்கள் தற்காலிக நிவாரணத்தைத் தரக்கூடும் என்றாலும், அவை பிரச்சினைக்கு பதில் அல்ல. ஆனாலும் விரக்தியடைந்த மக்களுக்கு அரசாங்கம் குறைந்தபட்ச நிவாரணம் வழங்க வேண்டும். எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலைகளில் விழுந்துவிடுவதைத் தவிர்ப்பதற்கான நீண்டகாலத் திட்டங்களை அரசாங்கம் கொண்டு வருவது அவசியம்.

*(இக்கட்டுரை 11.012025 இல் Dailymirror பத்திரிகையில் வெளியானது)*

**தமிழில்: வானவில்**

# குவாண்டம் ஆண்டின் மகத்துவம்!



ஐக்கிய நாடுகள் அவை, 2025 ஆம் ஆண்டை சர்வதேச குவாண்டம் அறிவியல் – தொழில்நுட்ப (International Year of Quantum Science and Technology - IYQ) ஆண்டாக அறிவித்துள்ளது. 2024 ஜூன் மாதம் 7 ஆம் திகதி இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. 2025 குவாண்டம் ஆண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்?

**குவாண்டம் அறிவியல் என்றால்...**

குவாண்டம் அறிவியலைப் புரிந்து கொள்வது எளிது. இந்தப் பிரபஞ்சம் இரண்டு வகையான பொருள்களால் ஆனது. அதில் ஒருவகையான பொருள் உலகம். மிகப் பிரம்மாண்டமானது. நம் கண்ணுக்குத் தெரியும் அனைத்துப் பொருள்களும்தான் அந்த உலகின் அங்கங்கள். இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள நட்சத்திரங்கள், சூரிய மண்டலத்தைப் போலவே அந்த நட்சத்திரங்களைச் சுற்றிவரும் கோள்கள் – இப்படிக் கண்ணுக்குத் தெரிந்த பெரிய உலகம் பற்றிய அறிவியல் ஆய்வு என்பது ஒருவகை.

அதேவேளை, வெறும் கண்களால் பார்க்க முடியாத பொருள்கள் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளன. அவை அணுக்களுக்கு உள்ளே உள்ளன. ஒவ்வொரு பொருளும் அணுக்களால் ஆனது. அணுக்கள் ஒன்றுகூடி மூலக்கூறுகள் ஆகின்றன. மூலக்கூறுகள் ஒன்றுகூடி இரசாயனப்பொருள்கள் ஆகின்றன. இவற்றின் கலவைகளாக உலோகங்கள், நாம் பயன்படுத்தும் – பார்க்கும் பொருள்கள், நம்முடைய உடல் உள்பட அனைத்தும் உள்ளன.

**அணுவுக்கு உள்ளே என்ன இருக்கிறது?**

எலெக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் என்னும் துகள்களும், அவற்றுக்குள் நுண்துகள்களும் உள்ளன. இந்த உலகத்தைத்தான் வெறும் கண்களால் காண முடியாது. அவற்றைப் பார்ப்பதற்கென்று 'நானோ' (Nano) தொலைநோக்கிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நுண் உலகைக் குறித்த அறிவியல்தான் குவாண்டம் அறிவியல்.

*ஆயிஷா. இரா.நடராசன்*

**குவாண்டம் அறிவியல் ஆண்டு**

குவாண்டம் கோட்பாடு என்கிற ஒரு முக்கிய அறிவியல் கோட்பாடு 1925 இல் முன்வைக்கப்பட்டது. அதனை முன்வைத்தவர்கள் எர்வின் ஷ்ரோடிங்கர் (Erwin Schrödinger), மேக்ஸ் பார்ன் (Max Born), சத்யேந்திர நாத் போஸ் (Satyendra Nath Bose), பாஸ்கல் ஜோர்டான் (Pascual Jordan), வெர்னர் ஹேய்சன்பார்க் (Werner Heisenberg) ஆகியோர். குவாண்டம் கோட்பாடு முன்வைக்கப்பட்ட நூறாவது ஆண்டை 2025 ஆம் ஆண்டு குறிக்கிறது. எனவே, இந்த ஆண்டை குவாண்டம் அறிவியல் – தொழில்நுட்ப ஆண்டாக ஐ.நா. அவை அறிவித்தது.

**நமக்கு எப்படிப் பயன்படுகிறது?**

குவாண்டம் அறிவியல் / தொழில்நுட்பம் இன்றைக்குப் பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. நம்முடைய கைபேசிகள், திறன்பேசிகளில் அன்றாடம் நாம் எதிர்கொள்கின்ற வலைப்பின்னல் உள்ளிட்ட இணையத்தின் செயல்பாடுகள் 'குவாண்டம் கீ விநியோகம்' (Quantum Key Distribution) என்று அழைக்கப்படும் முறைப்படிதான் செயல்படுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில் குவாண்டம் கணினிகள் அறிமுகமாக உள்ளன. குவாண்டம் குறியாக்கம், ஹேக் செய்யக் கடினமாக இருக்கின்ற, பாதுகாப்பான தகவல் தொடர்பு அலைவரிசைகளை உருவாக்க இவை பயன்படும். இன்றைக்குக் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள் தீவிரமடைந்து வருவதை நாம் அறிவோம். ஓர் இடத்தில் உருவாகக்கூடிய புயல் அல்லது நிலநடுக்கத்தை முன்னறிவிப்பதற்கான உள்ளீடுகளை 'குவாண்டம் கம்ப்யூட்டிங்' (Quantum computing) முறைப்படி அறியலாம்.

குவாண்டம் தொழில்நுட்பம் மூலம்தான் ஓர் இடத்துக்குச் சென்றடைவதற்காகத் திறன்பேசியில் இருக்கும் ஜி.பி.எஸ் (GPS) இடங்காட்டிகள் வேலைசெய்கின்றன. இதைத் தவிர, மருத்துவத் துறையில் நோய் கண்டறியும் கருவிகளுக்கு உள்ளேயும் இராணுவத் தளவாடங்களிலும் குவாண்டம் தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. 'பிக் டேட்டா' (Big Data) என்று அழைக்கப்படும் பெருந்தரவுக் காலக்கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்தக் காலக்கட்டத்தில் மனிதர்களின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் குவாண்டம் இயந்திரவியலின் பயன்பாடு எதிர்காலத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மக்கள் விழிப்புணர்வு**

2025 ஆம் ஆண்டை நான்கு வகையாகக் கொண்டாட வேண்டும் என்று ஐ.நா. அவை அறிவித்துள்ளது. குவாண்டம் கோட்பாட்டை முன்வைத்த வரலாற்றின் முக்கிய அறிவியலாளர்களை அடுத்த சந்ததி, கல்லூரி மாணவர்கள், மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களைக் கொண்டாட வேண்டும் என்கிறது ஐ.நா. அவை. குவாண்டம் அறிவியலின் முக்கியத்துவம், அதன் பயன்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும். குவாண்டம் கல்வி, வாய்ப்புகளை அனைவரும் அணுகும் வகையில் அனைத்து நாடுகளும் உறுதிப்படுத்த வேண்டும்.

உலகெங்கிலும் உள்ள மக்கள் குவாண்டம் தொழில்நுட்பங்கள் மூலம்

பயனடையக்கூடிய வகையில் அனைவருக்கும் அந்த அறிவியல் கொண்டுசேர்க்கப்பட வேண்டும். தொழில்நுட்பம், பண்பாடு, இயற்கை உலகைப் பற்றிய நம் புரிதலில் குவாண்டம் அறிவியலின் தாக்கங்களைத் தனியாக வரிசைப்படுத்திக் கொண்டாட வேண்டும்.

அடிப்படை அறிவியல், நம்முடைய அறிவியல் கல்வியில் குவாண்டம் இயந்திரவியல் சார்ந்த திறன்களை வலுப்படுத்த வேண்டும். நிலையான வளர்ச்சிக்கு குவாண்டம் அறிவியலின் முக்கியத்துவம் குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். 'பிக் டேட்டா' போன்றவற்றைப் பாதுகாப்பாக எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வைப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் வழங்க வேண்டும். இப்படிப் பல்வேறு வகைகளில் இந்த ஆண்டைக் கொண்டாட வேண்டும் என்று ஐ.நா. அவை அறிவித்திருக்கிறது.

அதே வேளையில், குவாண்டம் இயந்திரவியல் முன்னேற்றங்கள் குறித்துப் போட்டிகள் நடத்தி, ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து, அறிவியல் மாதிரிகள் தயாரித்து, புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்து, இந்தத் துறையை நாம் கொண்டாட வேண்டும். டிஜிட்டல் உள்கட்டமைப்பு, சைபர் பாதுகாப்பு, இணைய மோசடிகள் குறித்தும் அதிகமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறும் ஐ.நா. அவை, குவாண்டம் அறிவியல் தொழில்நுட்ப ஆண்டின் ஒரு பகுதியாக இணையப் பாதுகாப்பு ஆண்டாகவும் அறிவித்துள்ளது.

ஐ.நா.வின் துணை அமைப்பான யுனெஸ்கோ, 'அமெரிக்கன் ஃபிசிகல் சொசைட்டி' (American Physical Society -APS), ஜெர்மனியின் 'குவாண்டம் ஃபிசிக்ஸ் சொசைட்டி' (Quantum Physics Society) ஆகியவை உலகெங்கிலும் உள்ள அறிவியல் அமைப்புகளோடு இணைந்து உலகளாவிய ஒருங்கிணைப்பு – வழிநடத்தும் குழு ஒன்றை ஏற்படுத்தி உள்ளன. இந்தியா உள்பட அனைத்து நாடுகளிலும் உள்ள குவாண்டம் அறிவியல் துறை சார்ந்த வல்லுநர்கள் இந்தக் குழுக்களில் இடம்பெற்றுள்ளார்கள். இந்த மிகப் பெரிய அறிவியல் தருணத்தை அறிவியலர்களுடன் இணைந்து சமூகமும் கொண்டாடுவது அடுத்துவரும் தலைமுறைக்கு ஒரு பெரும் அடிக்கல்லாக அமையும்!

# சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கென்யா மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

ஏகாதிபத்திய சக்திகளால் ஆஸாத்தின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதும், டமஸ்கஸ்சின் வீழ்ச்சியும், சிரியாவின் இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் குறிக்கிறது. இது ஜனநாயகத்தினதும், சுய–நிர்ணய உரிமையினதும் வெற்றியல்ல, மாறாக ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்கினதும் வெற்றியாகும்.

எர்டோகன் (Erdogan) கீழுள்ள துருக்கி சிரியாவை நிலைகுலைய வைத்ததின் மூலமும், அதன் சுதந்திரத்தை அழித்ததின் மூலமும், தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு அடிவருடி என்பதை நிரூபித்துள்ளது.

ஏகாதிபத்தியத்தின் இந்தக்கண வெற்றியையிட்டு நாம் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. சிரிய மக்களின் எதிர்ப்பு, சிரிய கம்யூனிஸ்ட் கட்சி, பரந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் என்பன எதிர்நோக்கியுள்ள புதிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வலிமையுறவே அது உதவும்.

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளான ஏகாதிபத்திய சக்திகளும் ஆஸாத்துக்கு பிந்தைய ஒரு பொம்மை அரசை உருவாக்குவதைத் தவிர வேறொன்றும் அவர்களால் செய்ய முடியாது. ஏகாதிபத்திய தலைமீட்டுடன் ஒரு தசாப்த காலமாக யுத்தம் நடத்தி மக்களின் இடப்பெயர்வுகளையும், பொருளாதார அழிவுகளையும் ஏற்படுத்திய அத்தகைய ஒரு அரசுக்கு சிரிய மக்களின் அங்கீகாரம் ஒருபோதும் இருக்காது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம்



Comrade Booker Omole

தொடரும் வரையிலும், சியோனிஸ இஸ்ரேலின் காலனித்துவ விஸ்தரிப்பும் ஒடுக்குமுறையும் தொடரும் வரையிலும், மேற்காசியாவில் (West Asia) இறுதியான சமாதானம் ஏற்பட முடியாது.

கோலான் மலைப்பகுதியில் (Golan Heights) "பாதுகாப்பு நடவடிக்கை" என்ற போர்வையில் இஸ்ரேல் தற்பொழுது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அப்பட்டமான நிலப்பறிப்பும் ஆக்கிரமிப்புமாகும். அமெரிக்க ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கை இஸ்ரேலின் ஆக்கிரமிப்புத் திட்டத்தை மேலும் அம்பலப்படுத்துகிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சியோனிஸத்துக்கும் இடையிலான இந்தபுனிதக் கூட்டு மேற்காசியாவில் வாழும் மக்களின் இறையாண்மையையும் வளங்களையும் சூறையாடும் நோக்கம் கொண்டது. எந்த ஒரு சாம்ராஜ்யமும் எவ்வளவு பலமாக இருந்தாலும் நீடித்தது கிடையாது என்பதை வரலாறு எமக்கு நினைவூட்டுகிறது. பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பம், உலகளாவிய எதிர்ப்பியக்கம் என்பன அமெரிக்க சாம்ராஜ்யத்தை அழிவை நோக்கித் தள்ளியே தீரும்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, சுயநிர்ணயம், சோசலிசம், விடுதலை என்பனவற்றுக்காகப் போராடும் சிரிய மக்கள், சிரிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அனைத்து விதமான போராட்ட சக்திகளுக்கும் எமது உறுதியான ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்படுவதும், சியோனிஸ அரசு இல்லாதொழிக்கப்படுவதும், மேற்காசியாவின் விடுதலைக்கு மட்டும் முக்கியமானதல்ல, நீதியும் சமாதனமும் கொண்ட எதிர்கால உலகை நிர்மாணிப்பதற்கும் முக்கியமான நடவடிக்கைகளாகும்.

சிரிய மக்களின் போராட்டம் எமது போராட்டமாகும். ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், விடுதலையை வென்றெடுப்பதற்காகவும் போராடும் அனைத்து சக்திகளுக்கும் எமது தளர்ச்சியற்ற ஒருமைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். எதிர்காலம் ஒடுக்கப்படும் சுரண்டப்படும் மக்களுக்கானது. அவர்களது வெற்றியை எவராலும் தடுக்க முடியாது.

ஏகாதிபத்தியத்தின் நாட்கள் எண்ணப்படுகின்றன. மக்கள் வெற்றி பெறுவார்கள்!

**-Booker Omole**
**General Secretary**
**Communist Party Marxist -Kenya**

# நாங்கள் தனி வார்ப்புகள்!

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்புகள்: தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள் உலகப் பாட்டாளி வர்க்கப் படையின் நேர்நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனின் அணியில் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதைவிட சிறந்த பெருமை எங்களுக்கு வேறெதுவும் இல்லை. தோழர் லெனினினால் அமைக்கப் பெற்று, அவரது தலைமையில் இயங்கிய கட்சியில், உறுப்பினர் என்பதைவிட சிறந்த பெருமை வேறொன்றும் இல்லை. இப்படித் தொடங்குகிறது. லெனின் மறைந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரால் தோழர் ஸ்டாலின் எடுத்துக்கொண்ட சபதம். ஓம்! நாங்கள் தனி வார்ப்புகள், ஏனென்றால் நாங்கள் மக்கள்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவேதான் மகிழ்ச்சியும், நிறைவும், சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமைக்கும் பொழுது குறுக்கிடும் தடைகளைத் தகர்த்தெறிவதில் எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்த நேரத்திலும் நாங்கள் தயங்குவதில்லை. அடிமைத்தனம், சுரண்டல் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு முழந்தாளிட்டு வாழ்தல், வாழ்க்கையே அல்ல. அது மனிதன் என்ற பெயருக்கே அவமானம் தருவதாகும். இந்த அவல வாழ்வில் ஒரு கம்யூனிஸ்டு, ஒரு உண்மையான மனிதன் என்ற வகையில் திருப்தியடைய ஒன்றும் இல்லை. ஒருபோதும் இல்லை. எனவேதான், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் உண்மையான வாழ்வுக்காக நடைபெறும் போராட்டத்தில் எத்தகைய தியாகத்தையும் செய்ய பின்வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் மனிதனை நேசிக்கிறோம். மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச்சாதாரண மனித இன்பங்களின் மதிப்பை நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவேதான், மனிதன் உழைப்பை மனிதன் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமையிலிருந்து – அதாவது பயங்கரப் போரின் துன்ப துயரங்கள், வேலையில்லாத்



திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து – விடுவிக்கப்பட்டு மகிழ்ச்சியும், நிறைவும், ஆரோக்கியமும், சுதந்திரமும் உள்ள மனிதனுக்கு இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்பதற்காக எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒருபோதும் தயங்குவதில்லை.

இன்பம், அதிக இலாபம் மீண்டும் இன்னும் அதிக இலாபம் இதையே குறிக்கோளாகக் கொண்ட ஓர் அமைப்பு மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக, பண உறவையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பை நிலைநிறுத்தப் பார்க்கிறது. அது, மனிதனைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற மனிதத் தன்மையற்ற அமைப்பாகும். மனிதனை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு, ஒரு கம்யூனிஸ்டுக்கு மக்களின் மனிதத்தன்மை பறிக்கப்படுகிற பொழுது, சும்மா இருக்க முடியுமா? முடியாது. எனவேதான் நிறைவும், சுதந்திரமும், பண்பும், பொருந்திய மனிதனுக்காகப் போராடுவதில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின்வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் சுதந்திரத்தை விரும்புகிறோம். எனவேதான், உண்மையான சுதந்திரத்தை விரிவான சுதந்திரத்தை சுதந்திரம் என்ற வார்த்தைக்கு உரிய இலட்சணங்களோடு கூடிய சுதந்திரத்தை மனித குலம் முழுமையும் பெறுவதற்கான எங்கள் கட்சியின் கட்டுப்பாட்டுக்கு தோழர் லெனின் படையின் கட்டுப்பாட்டுக்கு இஷ்டபூர்வமாகப் பணிவதற்கு நாங்கள் ஒரு வினாடியும் தயங்குவதில்லை.

ஒரு சிலருக்கு மட்டுமே சுதந்திரம் – கொள்ளையடிக்க ஒரு தரப்பினருக்குச் சுதந்திரம். மற்றவர்களுக்குப் பட்டினியால் மடிய சுதந்திரம். இவை சுதந்திரம் அல்ல. அடிமைத்தனம். இந்த நிலைமைகளைக் கண்ட பிறகும் வாளா இருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு முடியுமா? சில தனிநபர்களுக்கு இதய கீதமாக விளங்கும் அத்தகைய சுதந்திரத்தால் திருப்தி அடைய முடியுமா? முடியாது. ஒருபோதும் முடியாது. எனவேதான் உண்மையான சுதந்திரத்திற்காக, விரிவான சுதந்திரத்திற்காகப் போராடுவதில் தங்களுடைய முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் ஆக்க வேலையை நேசிக்கிறோம். எனவேதான் மனிதனின் மகத்தான சிருஷ்டி சக்திகளுக்குக் குறுக்கே நிற்பவற்றைத் தகர்த்தெறிய ஒரு விநாடியும் தயங்குவதில்லை.

ஆயிரம், பல்லாயிரக் கணக்கான திறமையுடைய மனிதர்கள் மனித கலாச்சாரத்தைப் பல மடங்கு பெருக்கியிருக்க முடியும். மனித ஸ்தாபனத்தைச் சீர்திருத்தியிருக்க முடியும். மனிதன் தொழில் நுட்ப சதானங்களைக் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு உயர்த்தியிருக்க முடியும். அத்தகைய திறமைகள் இன்று பாழ்பட்டுக் கிடக்கின்றன. மனித குலத்திற்குத் தேவையுள்ள அனைத்தையும் ஏராளமாக அளிக்கும் திறமையும், வலிமையும் படைத்த ஆயிரம் ஆயிரம் கரங்கள் இன்று வேலையின்றி, சோம்பிக்கிடக்கின்றன. அடிக்கடி நிகழ்கின்ற நெருக்கடியான காலங்களில், அத்தகைய கரங்கள் சோம்பிக் கிடக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதனால், மனித சமுதாயத்திற்கு நேரிடுகிற நஷ்டத்தைத் தடுக்காமல் உட்கார்ந்திருக்க ஒரு கம்யூனிஸ்டுக்கு எப்படி முடியும்? முடியாது. எனவேதான், மனித குல சிருஷ்டி சக்திகள் அனைத்தையும் முழுமையையும் பயன்படுத்தி முழு வளர்ச்சி அடையும்படி செய்யும் ஒரு அமைப்பைப் பெறுவதற்கான போராட்டத்தில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள்

சமாதானத்தை நேசிக்கிறோம். எனவேதான் நாங்கள் போராடுகிறோம். போர் மூளுவதற்கான சூழ்நிலைகள் அனைத்தையும் நாங்கள் எதிர்த்துப் போராடுகிறோம். சில தனி நபர்களின் சொந்த நலன்களுக்காக நடைபெறும் பயங்கரப் போரில் கோடிக்கணக்கான மக்கள் மாண்டு மடிவற்கும் மனித வாழ்வுக்கு அவசியமான செல்வங்களை அழிப்பதற்கும் காரணமாகும் ஒரு குற்றவாளி கூட இல்லாத உலக அமைப்புக்காக நாங்கள் போராடுகிறோம். ஒருவாய்ச் சோற்றுக்காக மனிதனை எதிர்த்து மனிதன் சண்டை போட வேண்டிய நிலைமை எங்கே இருக்கிறதோ அங்கே சமாதானம் இருக்காது. இருக்கவும் முடியாது. எனவேதான் உண்மையான சமாதானத்திற்காக, மனித சமுதாயத்தின் புதிய ஸ்தாபனத்தால் உத்தரவாதம் செய்யப்படும் சமாதானத்திற் காகப் போராடுவதில் தங்கள் முழு உரிமையைப் பயன்படுத்தவோ தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் தயங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டைநேசிக்கிறோம். ஏனென்றால், எந்தவொரு நாடு அடக்கி ஒடுக்கப்பட்டாலும் மனிதனின் ஆக்க சக்திகள் சுயேட்சையாக வளர்ச்சி அடைய முடியாது. இறுதியான சமாதானத்திற்கு உத்தரவாதம் இருக்காது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. நமது மாபெரும் இலட்சியங்களை நாட்டின் ஜீவித அமைப்புக்குள்ளேயே அடைய விரும்புகிறோமே தவிர, அதற்கு அப்பாற்பட்டல்ல. இல்லாவிட்டால் அவை எதார்த்தமாக முடியாது.

உண்மையான புதல்வர்களின் நேசத்தோடு நாங்கள் தாய்நாட்டை நேசிக்கிறோம். எனவேதான் மனிதகுல மேன்மைக்காகவும் வளர்ச்சிக்காவும் எங்கள் நாடு வழங்கிய, இன்னும் வழங்குகிற எல்லா காரியங்களுக்காகவும், அதன் மேன்மைக்கும், வளர்ச்சிக்கும் உதவியாக உள்ள அனைத்திற்காகவும் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நாட்டை இழிவுபடுத்துகிற கொள்ளையிட விரும்புகிற, அதன் இரத்தத்தை உறிஞ்சுகிற, அதை பலவினப்படுத்துகிற அனைத்தையும் நாங்கள் அழித்து விட விரும்புகிறோம். எனவேதான், உலகில் சுதந்திரம் பெற்ற சமத்துவ நாடுகளின் மத்தியில் சம அந்தஸ்த்தோடு சுயேட்சையாக வாழும் பொருட்டு எங்கள் நாட்டின் பரிபூரண விடுதலைக்கான போராட்டத்தில் எங்கள் முழு வலிமையை ஈடுபடுத்தவோ சர்வ பரிதியாகம் செய்யவோ நாங்கள் தயங்குவதில்லை. நாங்கள் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் மகத்தானவை.

மகிமை வாய்ந்த உலகப் பாட்டாளி வர்க்கப் போர்த்தந்திர நிபுணரின் பட்டாளத்தைச் சார்ந்த – தோழர் லெனின் பட்டாளத்தைச் சார்ந்த – நாங்கள் இப்பொறுப்புக்களை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இந்தப் பட்டாளத்தின் ஒற்றுமையையும், தூய்மையையும் கம்யூனிஸ்டு கட்சியின் ஒற்றுமையையும், புனிதத் தன்மையையும் கண்ணின் கருமணி போன்று பாதுகாப்பது, மனித குலத்தில் சிறந்தவர்களையும், நாட்டின் சிறந்த சக்திகளையும் மேலும், மேலும், திரட்டுவது, எங்கள் கூட்டாளிகளின் எண்ணிக்கையை மேலும் மேலும் அதிகரிப்பது, வரலாற்றின் வளர்ச்சி எதை நோக்கிச் செல்கிறது. தங்களின் ஜீவாதார நலன்களுக்காக அது மக்களிடம் வேண்டி நிற்பது என்ன என்பவற்றை இடைவிடாது உணர்த்தி மக்களுடன் ஒன்றுகலந்து சலிப்பின்றி பொறுமையோடு அவர்களுக்கு வழிகாட்டுவது, உண்மையான உணர்வு, தைரியம், கருத்தில் உறுதி, தியாகம், சஞ்சலம் இன்மை ஆகிய சிறந்த மனிதப் பண்புக்கு இருப்பிடமாக விளங்குவது போன்றவையே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்.

கம்யூனிஸ்டு தோழர்களே! இது உங்களுக்கும் பொருந்தும்! ஏனென்றால், நீங்கள் லெனின் படையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் எந்தப் பகுதியில் வேலை செய்து கொண்டிருப்பினும், மனிதகுலத்தின் விடுதலைக்காகப் புரட்சியின் எந்த அரணில் நின்று போராடிக் கொண்டிருப்பினும், தன்னந்தனியாக கடமையைச் செய்து கொண்டிருப்பினும், கொடிய வர்க்கங்களால் இருண்ட சிறைகளில் பூட்டப்பட்டிருப்பினும் ஒவ்வொரு நாளும் உங்கள் செயல்களையும், எண்ணங்களையும் விமர்சனம் செய்யுங்கள். மாபெரும் லெனின் பட்டாளத்தில் ஒரு போர் வீரனாக இருக்க நான் தகுதி உள்ளவனா? தோழர் ஸ்டாலின் பெயரால் எடுத்துக்கொண்ட சபதத்தை விசுவாசத்துடன் மரியாதை செய்யத் திறமை உள்ளவனா? வரலாறு நம் மீது சுமத்துகிற எதிர்காலக் கடமைகளை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு நான் வளர்ச்சி அடைந்திருக்கிறேனா? இவையே நாம் விமர்சனம் செய்ய வேண்டிய எண்ணமும் செயலும் ஆகும்.

எங்களிடம் அனுதாபம் உள்ள நண்பர்களே! அது உங்களுக்கும் பொருந்தும். போராடுகிற மக்கள் அணியில் நீங்கள் எங்கு நின்றாலும் எந்தப் பகுதியில் இருந்தாலும் உங்கள் அனுதாபத் தைச் செயலில் காட்டுவது எப்படி, கட்சியோடு நெருங்கிய தொடர்புகொள்வது எப்படி? என்பனவற்றைப் பற்றி அடிக்கடி சிந்தியுங்கள். அவ்வாறு சிந்திப்பதனால் கட்சியின் அணிவகுப்பு முன்னேறிச் செல்லும் பொழுதும், அதனுடன் சேர்ந்து நீங்களும் முன்னேற முடியும். அதனால், உங்களுக்கு வழிகாட்டியாக இருந்து கொடிய போரில் உயிர் நீத்த தியாகிகளுக்குப் பதிலாக நீங்களே கட்சி அணியில் இடம்பெறுவீர்கள்.

சமீப காலம் வரை எங்களைப்பற்றி அறிந்து கொள்ளாதவர்களுக்கும், எங்களுக்கும், கட்சியை சந்தேகத்துடன் பார்த்து வந்தவர்களுக்கும், ஹிட்லரின் நாசகார கும்பலை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நின்றவர்களுக்கும் இது பொருந்தும். நீங்கள் மிக உன்னிப்பாக எங்களைக் கவனித்து வருகிறீர்கள். எங்கள் செயல்களைக் கூர்ந்து கவனிக்கிறீர்கள். ஆம், வெகுநுட்பமாக கவனியுங்கள். எங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் பாருங்கள். எங்களுடைய ஒவ்வொரு செயலையும் அலசி அலசி ஆராயுங்கள், விமர்சியுங்கள்.

உங்களுக்குத் தெரியாமல் மறைக்க வேண்டியது ஒன்றுமில்லை. மக்களுக்குத் தெரியாமல் மூடிமறைக்க வேண்டியது யாதொன்றும் எங்களுக்கு இல்லை. உங்களுக்கு முன்னால் நாட்டு மக்களுக்கு முன்னால் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மிகக்கடுமையான அக்கினிப் பரீட்சையில் நாங்கள் இறங்கியிருக்கிறோம்.

நாங்கள் போரில் புறமுதுகு காட்டினோம் என்றோ, ஏதோ ஒன்றில் தவறினோம் என்றோ, எங்களின் நேர்மையற்ற விரோதி கூட சொல்லத் துணியமாட்டான். கூர்ந்து கவனியுங்கள். இதற்கான காரணத்தை அறிவீர்கள். உலகின் பெரும் பகுதி இன்றைக்கு எங்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கியிருப்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

மனிதகுலம் சுதந்திரமாகவும், சமாதானமாகவும், ஆனந்தமாகவும் வாழ்வதற்கு நாங்கள் கடைபிடிக்கும் வழியைத் தவிர, வேறு வழியே இல்லை. எங்களுடன் வராத ஒருவன் தனக்கே விரோதமாகப் போகிறான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்!

**-ஜூலியஸ் பூசிக்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

அயல் உறவைப் பொறுத்தவரையில், 'இந்தியாதான் முதன்மையானது' என்ற கொள்கையையும் பின்பற்றுகின்றது. (முன்னைய காலங்களில் எடுத்ததெற்கெல்லாம் இந்தியாவை எதிர்த்த சூரர்கள்தான் இவர்கள்)

தாம் ஆட்சிக்கு வந்தால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உடனடியாகக் குறைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு மாறாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் முன்னைய ஆட்சிக் காலங்களை விட இரண்டு மூன்று மடங்கு அதிகரித்துள்ளதுடன், அரிசி, தேங்காய், உப்பு போன்ற அடிப்படையான பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடும் நிலவுகின்றது.

தமது ஆட்சியில் இலங்கையின் பொதுச்சொத்துக்கள் பாதுகாக்கப்படும் என்று சொன்ன தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படி பொதுச்சொத்துக்கள் தொடர்ந்தும் தனியாருக்கு தாரைவார்க்கப்படுவதுடன், நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப அரச ஊழியர் தொகையை சரி பாதியாகக் குறைக்கவும், வங்கிகள், சுகாதாரத்துறை, கல்வி, போக்குவரத்து என்பனவற்றைத் தனியார்மயப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொளளப்படுகின்றன.

தமது ஆட்சியின் கீழ் அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று சொன்னவர்கள், இப்பொழுது எதிர்க்கட்சிகள் மீது முழு அளவிலான பழிவாங்கல்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தமது ஆட்சியின் கீழ் முன்னைய அரசாங்கங்களின் காலத்தின் போது ஊழல், மோசடி, அதிகார துஸ்பிரயோம் என்பனவற்றில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றவர்கள், இப்பொழுது அத்தகைய செயல்களில் ஈடுபட்ட சில 'சில்லறைகள்' மீது கண்துடைப்புக்காக நடவடிக்கை எடுப்பதுடன், அத்தகைய செயல்களில் ஈடுபட்ட 'பெரும் மனிதர்கள்' பலரை தமது ஆட்சியிலும் பொறுப்பான பதவிகளில் நியமித்துள்ளனர்.

தாம் ஆட்சிக்கு வந்தால், உடனடியாக புதிய அரசியல் அமைப்பு கொண்டு வந்து நிறைவேற்று ஜனாதிபதி முறை உட்பட தற்பொழுதுள்ள ஜனநாயக விரோத நடைமுறைகளை நீக்குவோம் என சவாலடித்தவர்கள், இப்பொழுது புதிய அரசியல் சாசனம் கொண்டுவர 3 ஆண்டுகள் பிடிக்கும் என சாக்குபோக்கு சொல்கின்றனர்.

தாம் மாகாண சபை முறையை ஏற்காதபோதும், தமிழ் மக்கள் அதை தமக்கான ஒரு தீர்வாகக் கருதுவதால், அந்த முறையைத் தொடர்வதுடன், மாகாண சபைகளுக்கு விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் உறுதியளித்தவர்கள், இப்பொழுது இந்தியா மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும்படி தம்மிடம் ஒருபோதும் வலியுறுத்தவில்லை என தமது உண்மையான சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளார்கள். அது மாத்திரமல்ல, ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா மாகாண சபைகள் விரைவில் ஒழித்துக்கட்டப்படும் எனவும் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அது மாத்திரமின்றி, அமைச்சரவை நியமனத்தின் போதும், அரச பதவிகள் நியமனங்களின் போதும், சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களை முற்றாகப் புறக்கணித்துள்ளனர்.

தமது ஆட்சியில் ஊடக சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும், மனித உரிமைகளும் நன்கு பேணப்படும் என்று சொன்னார்கள். ஆனால் சர்வதேச நாணய நிதியம் சம்பந்தமாக பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுங்கு செய்த கருத்தரங்கொன்றைத் தடை செய்துள்ளனர். தமது அரசை விமர்சிக்கும் ஊடகங்கள் மீது கெடுபிடிகளை ஆரம்பித்துள்ளனர். ஊடகங்களுக்கு எதிரான இவர்களது அடக்குமுறையை இலங்கையில் உள்ள 19 சிவில் அமைப்புகளும், சர்வதேச அமைப்புகளும் கண்டனம் செய்துள்ளன.

இலங்கையின் வளங்களை ராஜபக்ச குடும்பத்தினர் சூறையாடி அதனால் கிடைத்த பெருமளவு நிதியை அவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கின்றனர் என தேர்தல் காலங்களில் பிரச்சாரம் செய்து, அவர்கள் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கையைச் சிதைத்தனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கும்படி ராஜபக்ச குடும்பத்தினர் சவால் விடுத்த பொழுது, தாங்கள் அப்படி ஒருபோதும் சொல்லவில்லை என இப்பொழுது பல்டி அடிக்கின்றனர்.

இவ்வாறு இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசு தேர்தலுக்கு முன்னர் ஒரு கதையும், ஆட்சிக்கு வந்த பின்னர் இன்னொரு கதையுமாகக் கூறி வருகின்றனர். பொய்சொல்லி, மக்களை ஏமாற்றி, அவர்களது வாக்குகளை கொள்ளையடித்து, ஆட்சிக்கு வந்த இவர்களால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என்பது, இவர்கள் ஆட்சிக்கு வந்த சொற்ப நாட்களிலேயே அம்பலமாகிவிட்டது.

இதனால் வெகுவிரைவில் இவர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவது தவிர்க்க முடியாமல் நிகழும். அப்படி மக்கள் கிளர்ந்து எழும்போது அதை அரச வன்முறை கொண்டு அடக்குவதே இவர்களது செயல்பாடாக இருக்கும். அதன் தொடர்ச்சி இலங்கையில் ஒரு பாசிச அரசு நிறுவுவதிலேயே போய் முடியும். அதைத்தான் தம்மை எதிர்ப்பவர்களுக்கு சிறைத்தண்டனைதான் பரிசு என இந்த அரசாங்கத்தின் பிரதமரும், சில அமைச்சர்களும் ஏற்கெனவே பகிரங்கமாக அறிவித்துவிட்டனர்.

இந்த நிலைமையில் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதே கேள்வி. 'வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்' என்ற முதுமொழிக்கேற்ப மக்கள் இவர்களால் வருங்காலத்தில் ஏற்படப்போகும் பெரும் அடக்குமுறையைச் சமாளிக்க இப்பொழுதே தயாராக வேண்டும்.

---


**9ம் பக்கத்தொடர்ச்சி...**

இளைஞர்கள் குழந்தைகள் பெற்றுக் கொள்வதை தவிர்ப்பதற்கான காரணம் என மக்கள் தொகை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மக்கள் தொகை குறித்து, சீனாவின் புள்ளியியல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சீனாவில் கடந்த 2023 ஆம் ஆண்டு மக்கள்தொகை 140 கோடியே 90 இலட்சமாக இருந்தது. இதில் 2024 ஆம் ஆண்டில், 13 இலட்சத்து 90 ஆயிரம் குறைந்துள்ளது.

2023 ஆம் ஆண்டு சீனாவில் 90 இலட்சம் குழந்தைகள் பிறந்துள்ளன. 2024 ஆம் ஆண்டில் 95 இலட்சத்து 40 ஆயிரம் குழந்தைகள் பிறந்துள்ளன. 2023 ஆம் ஆண்டில் ஆயிரம் பேருக்கு 6.39 ஆக இருந்த குழந்தை பிறப்பு விகிதம் 2024 ஆம் ஆண்டு ஆயிரம் பேருக்கு 6.77 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில், மொத்தம் இறந்தவர்கள் எண்ணிக்கை ஒரு கோடியே 11 இலட்சமாக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 93 இலட்சமாக இருந்தது.

சீனாவில் 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 2024ம் ஆண்டில் 31 கோடியாக அதிகரித்து உள்ளது, இது மொத்த மக்கள் தொகையில் 22 சதவீதம் ஆகும். இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 29 கோடியே 69 இலட்சமாக இருந்தது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# நூறு நாட்களாக 'ஏ.கே.டி'




**தே**சிய மக்கள் சக்தி (என்.பி.பி) என்ற 'இடது சார்பு' அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. கடந்தகால தலைவர்களால் பிணியுற்று சோர்வடைந்த மக்கள், அனுர குமார திஸாநாயக்கா (ஏ.கே.டி) தலைமையிலான கட்சி அதிகாரத்தில் அமருவதற்கு வாக்களித்தனர். கடந்தகால தலைவர்கள் நிறைய வாக்குறுதியளித்திருந்தனர். ஆனால் அவர்களின் பதவிக்காலம் ஊழல் மற்றும் மீறப்பட்ட வாக்குறுதிகளால் களங்கமடைந்திருந்தன.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதும் வக்கிரமான அரசியல்வாதிகளையும் அவர்களது அடியாட்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதுமே ஜனாதிபதியின் கட்சியின் பிரதான பிரச்சாரத்தளமாக இருந்தது. முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) பேச்சுவார்த்தை நடத்திய உடன்பாட்டை மறு பேச்சுவார்த்தை நடத்தவும் புதிய அரசு முயற்சிக்குமென வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த உடன்பாடு கடுமையான சிக்கன நடவடிக்கைகள், வரி உயர்வுகள் மற்றும் மானியங்களில் வெட்டுக்களுக்கு வழிவகுத்ததுடன், அனைத்து ஏழைகளையும் கடுமையாகத் தாக்கின.

ஜனாதிபதி மற்றும் அவரது கட்சியும் அடக்குமுறை மிகுந்ததும் இழிவானதுமான பயங்கரவாத தடைச் சட்டத்தை அகற்றுவதாக வாக்குறுதியளித்தனர். ஒரு நபர் நீதிமன்றத்தில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்படும் வரை அவர் குற்றவாளியாகக் கருதப்படமாட்டார்

என்ற கருத்தை இந்த சட்டம் திறம்பட தலைகீழாக மாற்றியது. இந்தச் சட்டம் நீதிமன்றத்தின் முன் குற்றம் சாட்டப்படுவதற்கு முன்னர், குற்றம் சாட்டப்பட்டவர்களை நீண்ட காலத்திற்கு காவலில் வைக்கவும் அது அனுமதித்தது,

இந்தக் கொள்கைகளை அமுல்படுத்தி புதிய ஜனாதிபதிக்கு உதவுவதற்காக, வாக்காளர்கள் அவருக்கும் அவரது அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வழங்கினர். சிறுபான்மை சமூகத்தினரும் அவருக்கு உதவிக்கரம் நீட்டினார்கள். சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து குறுகிய நலன்களை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்த தமிழ் சமூகம், வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதியின் கட்சிக்கு வெற்றியை அளித்ததன் மூலம், ஜனாதிபதிக்கு நம்பிக்கை வாக்கினை வழங்கியது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிணை எடுப்புப் பொதியை மீள் பேச்சுவார்த்தை நடத்துவதாக வாக்குறுதியளித்த போதிலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அரசாங்கம் அதனை சாதாரணமாக விழுங்கித் தள்ளியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

வாழ்க்கைச் செலவை கட்டுப்படியாகும் மட்டத்திற்கு கொண்டு வருவதாக வாக்குறுதியளித்த போதிலும், விலைவாசி அதிகரித்துள்ளது. எங்களது முக்கிய உணவான அரிசியின் விலை கூட சமூகத்தின் பலவீனமான பிரிவினருக்கு மட்டுமல்ல, மத்தியதர வர்க்கத்தினருக்கும் எட்டாத தூரத்தில் உள்ளது.

5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 1.2% பேர் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. எண்ணிக்கையில், கிட்டத்தட்ட 16,000 குழந்தைகள் இத்தகைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே வளர்ச்சி குறைபாட்டில் 10.3% அதிகரித்திருப்பதாக ஊட்டச்சத்து மாதம் 2023 (Nutrition Month 2023) அறிக்கை தெரிவிக்கின்றது. இது முந்தைய ஆண்டை விட 9.2% அதிகரித்துள்ளது.

அரசாங்கம் தோல்வியை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக, முன்னைய அரசாங்கமே பிரச்சினையை உருவாக்கியதாக அரசாங்க அமைச்சர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். என்ன நடந்ததென இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். மக்கள் முன்னே அற்பத்தனமான ஞான முத்துக்களை விட்டெறியும் அரசாங்க அமைச்சர்கள் அவர்களுக்கு தேவையில்லை.

உண்மையில், இந்த நிலைமையை மாற்றுவதற்காகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. இந்த மோசமான அல்லது வருந்தத்தக்க நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில், அரசியலை நிராகரிக்கும் சக்திகள் தாக்குதல் நடத்துவதற்கு (முன்னைய அரசாங்கத்தின்) இந்தத் தோல்விகளை கைப்பற்றியுள்ளனர். நாடு எப்படி வழி நடத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் அறிவுக்கூர்மை கூட அவர்களில் ஒரு சிலரிடமே உள்ளது.

மொத்தத்தில், முதல் நூறு நாட்களில், புதிய அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை.
பசியால் வாடும் அதன் குடிமக்களுக்கு அது நிவாரணம் அளிக்கவும் இல்லை.

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**